Quality Japanese Car Parts
Japarts
Discount Prices
08450 66 44 22
www.japarts.co.uk

FREE இலவசம்
The UDHAYAN
# உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

Diamond Palace
Mithus Jewellery
Tooting 020 87675333 76 High Street SW17
Croydon 02086831756 322 London Road

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN 53 Dec 2006 / Jan 2007
For News: 020 8279 0354

## Happy New Year 2007

**UDHAYAN WISHES A PEACEFULL YEAR FOR ALL OUR READERS AND ADVERTISERS**



உதயனின் தனது உள்ளம் கனிந்த நலவாழ்த்கள்

# டெல்லியில் இலங்கை தமிழ் எம்.பி.க்கள்

பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து இலங்கை தமிழர்களின் அவல நிலையை பற்றி எடுத்துக்கூறினர்.

இலங்கையில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் ஆதரவு பெற்ற தமிழ் தேசிய கூட்டணியை சேர்ந்த எம்.பி.க்கள் ஆர்.சம்பந்தம் தலைமையில் டெல்லி வந்தனர். அவர்கள் நேற்று பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது அலுவலகத்தில் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

அதன்பிறகு ஆர்.சம்பந்தம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறுகையில் இலங்கையில் தமிழர்களை கொல்வது அவர்களின் சொத்துக்களை நாசம் செய்வது போன்ற அட்டூழியங்களை இலங்கை ராணுவத்தினர் செய்து வருகின்றனர் என்றும் இலங்கை தமிழர்களின் நிலைமை பரிதாபமாக உள்ளது என்றும் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தாங்கள் எடுத்துக்கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

உணவு, மருநது, எரிபொருள் இல்லாமல் தமிழர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தமிழர்களின் நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருவதாகவும் அவர்கள் பிரதமரிடம் எடுத்துக்கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமருடன் நடந்த இந்த சந்திப்பின் போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத்துறை செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

தமிழ் பேசும் இலங்கை தமிழர்களுக்கு உரிய சட்டப்பூர்வ உரிமைகள், அரசியல் அங்கம் எதுவும் இல்லாமல் இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இருப்பது அர்த்தமாகாது என்றும் இந்த விஷயத்தில் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் இந்த பிரதிநிதிகள் குழு பிரதமரிடம் எடுத்துக்கூறியதாகவும் சம்பந்தம் தெரிவித்தார்.

இலங்கை தமிழர்களுக்கு மனிதாபிமான உரிமைகள் மறுக்கப்படுவது, மனித உரமை மீறல்கள் குறித்து இந்தியாவும் தனது அரசும் மிகவும் கவலை அடைந்துள்ளது என்றும்

Continues Page 10

D4P
334-340 Romford Rd
Forest Gate London E7 8BS
F. 0208 555 2 116
dial4parts@hotmail.co.uk
DIAL 4 PARTS
Service With Satisfaction
SPECIAL OPENING OFFERS
On Japanese, Korean, European Parts
Full workshop facility
T. 0208 555 2 111

TRADE CASH & CARRY
MAKBROS
RICE, ETHNIC, BEERS, WINES, SOFT DRINKS, CRISPS, CHOCOLATES
SPECIALS
AKASH BASMATI PM 10kg £4.85
RIBENA 27X288ML £6.79
TATE &LYLE SUGAR 15X1KG £8.29
WE ARE HERE FOR YOUR CONVENIENCE
WALK IN ONLY
TEL: 0208 204 0533
FAX: 0208 204 0633
UNIT 8, DALSTON GARDENS, STANMORE,MIDDX,HA7 1BU.
Nisa Today's

MOBILE GOSSIP
1000MINS + 200TEXTS
ANY TIME
ANY NETWORK
£5.99 FOR
11 MONTHS
12 MONTHS CONTRACT
Free insurance
179, Ealing Road, Wembley, Middlesex.
HA0 4LW.Tel: 0208 9000 151

RIGHT PRICE
TRADE CASH & CARRY
((((( Many Opening Offers )))))
UNIT 8 WHITBY AVENUE PARK ROYAL INDUSTRIAL ESTATE LONDON NW10 7SF
CHOCOLATES, DRINKS, BEER, RIZLA, STATIONERY, TOILETERIES, TOYS
TEL:020 3188 3005 FAX:020 3188 3006

Starline
15 Years established
• புதிய இணைப்பைப் பெறுவதற்கோ
• கைத்தொலைபேசி உதிரிப்பாகங்களுக்கோ
• நவீனமயமாக்கவோ
• அல்லது எந்த விதமான பழுதுகளையும் திருத்தி சரிசெய்யவும்
• சகல பிரச்சனைகளையும் தமிழில் பேசி
T. 0208 606 8888
235 The Broadway Southall UB1 1ND

DPR D.P.R. WHOLESALERS
BRANCHES AT SOUTH WOODFORD & EDMONTON
South Woodford: 020 8498 0755 Edmonton: 020 8807 8971
FOR YOUR TOYS, GIFTS & SEASONAL CALL
OLD LD.TOYS CUSTOMER WELLCOME
FOR YOUR HOUSEHOLD,
HARDWARE & GARDENING
DPR FOR QUALITY & STOCK AVAILIBILITY
www.dprwholesalers.com info@dprwholesalers.com

V.J.CARPETS
110 The Green, Southall Middlesex, UB2 4BQ
Tel: 020 8574 9033
SPECIALOFFERS
FREE UNDERLAY WORTH £3.57 SQ.MTR
WITH CARPETS OVER 5.96 S.Q. MTR
WE ARE NOW OFFERING FREE FITTING, FREE MEASURING FREE ESTIMATING & FREE LOCAL DELIVERY

SALOM FOOD PRODUCTS
SFP
For best quality food products
Agents & distributes requires
இலங்கை இந்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான உணவுப்பொருட்களை மலிவாக பெற்றுக்கெள்ள ஒரே ஸ்தாபனம்
SALOM FOOD PRODUCTS
Call US: 0208 9089292 - 078 3222 0687

KV Builders & Contractors
Loft Conversion
Rear & Side Extention
Roofing
FREE Estimate
25 Years Experience.
100% Guaranteed Work
Special Offer: 3 bedroom replacement roof, Tilling for £ 1700 only
Call Kulveer:
020 8570 7152
07932 500 777

R&J HEATING & PLUMBING TRADE LTD
BRISTAN ARMITAGE HERITAGE AQUALISA
Complete Bath Suite £199* Only
(Includes WC, Basin&Pedestal, Steel Bath, Mixer Taps, Bath Waste)
Many Other Special Offers In-store
Call us on 0208 538 7722
Address:
Unit 3, Derby Road Ind Estate
Derby Road, Hounslow
Middx, TW3 3UH
Tel: 0208 538 7722 / Fax: 0208 538 7733
* Price Includes VAT

**பிரித்தானியத் தமிழர்களின் செய்திப் பத்திரிகை**

உண்மை ! நடுநிலமை !
மக்கள் நலன் !

1997 முதல் அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்டு வெளிவரும் தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை.

தொடர்புகளுக்கு :
UDHAYAN
P O Box 35806
London, E11 3JX, UK
Tel : 020 8279 0354

ஆசிரியர் குழு:
தலைமை நிருபர்:
த ஜெயபாலன்
செய்தி ஆய்வு:
ரி கொன்ஸ்ரன்ரைன்
விளம்பரப் பொறுப்பாளர்:
த புஸ்பலிங்கம்

நிருபர்கள்:
கே அரவிந்தன் (இலண்டன்)
பொன் சிவகுமார் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கே பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

உதயன் பத்திரிகை GNM(PVT) LTD இனால் மாதாந்தம் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் உதயன் பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல்மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# யாழில் காணாமல் போவதிலும் மோசடி

அண்மைக்காலமாக இனம்தெரியாதவர்களால் தமிழ் பகுதிகளில் இளைஞர்கள் கடத்தப்படுவது, நாளாந்த நிகழ்வாகியுள்ளது. இந்த மோசமான அவலநிலையை சிலர் தமது சுயநலங்களுக்கு பயன்படுத்த முற்பட்டு உள்ளனர். வெளிநாடு செல்லும் யாழ்ப்பாண இளைஞர்கள் அகதி அந்தஸ்துப் பெறுவதற்காக போலியான முறைப்பாடுகளைச் செய்கின்றனர் என தற்போது பரவலாக செய்திகள் வெளிவந்துள்ளது.

கனடா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு தமக்கு அகதி அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்பதற்காக இளைஞர்கள் கடத்தப்படுகின்றனர், காணாமற் போகின்றனர் எனப் போலியான முறைப்பாடுகளை யாழ் இளைஞர்களும் பெற்றோர்களும் மனித உரிமை அமைப்பு, ஐ.நா.தூதரகம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு போன்றவற்றில் முறையிடுகின்றனர். இவை பத்திரிகைகளிலும் செய்திகளாக வெளிவருகின்றது. பின்னர் அகதி அந்தஸ்து கோருவதற்குப் இவற்றைப் பயன்படுத்துவதாகத் தெரியவருகிறது.

முறைப்பாடுகளை செய்துவிட்டு சில நாட்கள் தமது நண்பர்கள் உறவினர்கள் வீட்டில் தலைமறைவாகின்றனர். சில நாட்கள் கழிந்த பின்னர் வெளியே வந்து தாங்கள் பாதிக்கப்பட்டதாகவும் கதையளக்கின்றனர்.

இந்தப் போலியான முறைப்பாடுகளால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் மீதும் சந்தேகம் ஏற்படுவதுடன் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை தாமதமாக்குகின்றது. இதனால் அவர்களுக்கு உயிராபத்தும் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

# பழங்கால கிரீடம், செப்புத் தகடு

காஞ்சிபுரத்தில் பாதாள சாக்கடை திட்டத்துக்கான பள்ளம் தோண்டும் போது பழங்கால கிரீடம், செப்புத் தகடு கொண்ட பானை கண்டெடுக்கப்பட்டது.

பெரிய காஞ்சிபுரம் தர்காவுக்கு பின்புறம் அங்காளம்மன் கோயில் தெரு உள்ளது. இங்கு பாதாள சாக்கடை இணைப்பு திட்டத்துக்காக நகராட்சி பணியாளர்கள் பள்ளம் தோண்டினர்.

அப்போது 5 அடி ஆழத்தில் வினோத சத்தம் எழும்பியது. மேலும் நன்றாக தோண்டிய போது ஒரு பானை கிடந்தது. அதை வெளியில் எடுத்து பார்த்த போது பானையின் உள்ளே ஓன்றே கால் அடி உயர வெள்ளி கிரீடம், 30 கடவுள் உருவங்கள் பொறிக்கப்பட்ட செப்புத் தகடு உள்ளிட்டவை எடுக்கப்பட்டன.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் நகராட்சி தலைவர் வி.ராஜேந்திரன், துணைத்தலைவர் டாக்டர் ஜி.சம்பந்தம் ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்ரு செய்தனர்.

காஞ்சிபுரம் தாசில்தார் செல்வராஜூம் பள்ளத்தில் எடுக்கப்பட்ட கிரீடம், செப்புத் தகடுகளை ஆய்வு செய்தார். தொல்லியல் துறைக்கு தகவல் அளிக்கப்பட்டது.

தொல்லியல் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்த பின்னர் அக்கிரீடம், செப்புத் தகடு எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்பது தெரியவரும்.

அங்காளம்மன் கோயில் முன்பு மேசை போடப்பட்டு அதன் மீது 2 பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை அப்பகுதி மக்கள் வந்து ஆர்வமுடன் பார்வையிட்டு சென்றனர்.

# உதயன் பத்திரிகை ஆலோசகரை TRAG பொதுக் கூட்டத்தில் இருந்து வெளியேற்ற முயற்சி

TRAGஇன் 21வது வருட பொதுக்கூட்டம் டிசம்பர் 9ல் வோல்தம்ஸ்ரோ வை எம் சி ஏ ல் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு அவர்களின் அழைப்பின் பேரில் சென்ற உதயன் ஆசிரியர் குழு ஆலோசகர் டொக்டர் பி சிவகுமாரை வெளியேற்ற முயற்சிக்கப்பட்டது. எங்களைப் பற்றி கூடாமல் எழுதுவதாக வெளியேற்ற முற்பட்ட TRAG அமைப்பின் உறுப்பினர் தெரிவித்து உள்ளார்.

கடந்த ஆண்டு இவ்வமைப்பு தனது 20வது ஆண்டு நிறைவை வெகுவிமரிசையாகக் கொண்டாடியது. அது பற்றிய மதிப்பீட்டை அலசி ஆராய்ந்த விமர்சனக் கட்டுரை உதயன் பத்திரிகையில் கடந்த ஆண்டு வெளியாகி இருந்தது. இக்கட்டுரை பற்றிய எதனையும் அறிந்திராத அண்மையில் லண்டன் வந்திருந்த டொக்டர் சிவகுமார் லண்டனில் பொது அவையில் தான் நடத்தப்பட்ட விதம் கண்டு அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தார்.

இச்சம்பவம் பற்றிய கருத்தை இவ்வமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான கவுன்சிலர் போல் சத்தியநேசனிடம் கேட்ட போது "120,000 பவுண்கள் பொதுப் பணத்தில் இயங்கும் ஸ்தாபனம் பற்றிய சமூக மதிப்பீட்டை எழுதுவதற்கு பத்திரிகைக்கு முழுச் சுதந்திரம் உண்டு" என்றும் "அதற்காக அதனைப் பற்றியே அறிந்திராத ஒருவரை அவ்வமைப்பின் பொதுக்கூட்டத்தில் இருந்து வெளியேற்றியது வன்மையாகக் கண்டிக்கப்படத் தக்க செயல்" என்றும் தெரிவித்தார்.

இறுதியில் டொக்டர் சிவகுமார் தன்னை ஒரு உறுப்பினராக பதிவு செய்து வெளியேற்றப்பட முடியாத தனது உரிமையை நிலைநாட்டினார்.

(முன்னைய கட்டுரை தொடர்பாக வந்த மடல்களும் அதற்கான பதில்களும் அடுத்த இதழில் வெளிவரும்.)

Reported by TJEABALAN

# இலங்கைக்கு செல்ல வேண்டாம் என பிரான்ஸ் எச்சரிக்கை

தனது பிரஜைகளை இலங்கைக்கு குறிப்பாக நாட்டின் வடக்கு கிழக்கு பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என பிரெஞ் அரசு நவம்பர் 30 அன்று எச்சரித்து உள்ளது. மாவீரர் தின உரையை அடுத்து இலங்கையில் வன்முறைகளும் தற்கொலைத் தாக்குதலும் நிகழும் என்ற அச்சத்தில் இந்த எச்சரிக்கையை வழங்கி இருந்தது. இவ்வெச்சரிக்கை விடுக்கப்பட்டு 24 மணிநேரத்திற்குள் கொழும்பில் தற்கொலைக் குண்டு வெடிப்பு ஒன்று நிகழ்ந்தது.

# இளவாலை பழைய மாணவிகளின் ஒன்றுகூடல்

இளவாலை திருக்குடும்ப கண்ணியர் மட பழைய மாணவிகளின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி 25.11.06 அன்று நோத்ஹோல் மிடில் செக்ஸில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு CAFOD நிறுவனத்தின் ஆசிய பொறுப்பாளர் செல்வி ஒல்வின் மேனாட் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அவர் தனது உரையில் CAFOD ஸ்தாபனம் வடகிழக்கு மாகாணங்களில் செய்யும் பல சேவைகளை பற்றி கூறினார். இவ்வொன்று கூடல் சங்கத் தலைவர் சாந்தினி பஸ்தியாம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

## சிறுவர் ஆள்சேர்ப்பு

### ஐ. நா. அறிக்கை



கருணா தலைமையிலான குழு சிறுவர்களை பயிற்சிக்கு கடத்த சிறீலங்கா துருப்பினர் உதவுகின்றனர் என ஐ நா அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். இக் குற்றச்சாட்டை சிறீலங்கா மறுத்துள்ளது.

HAPPY NEW YEAR

www.ratnamarble.co.uk
RMGL
RATNA MARBLES AND GRANITE LTD
Importers of Marble, Granite, Lime stone, Sand stone, Kitchen worktops, Vanity tops & Bathrooms
RATNA MARBLE & GRANITES LTD
Office 2, 15 Main Drive, East Lane Business Park, Wembley - HA9 7NA
Tel - Fax : 0208 904 3441
Mob : 07900 457 139

TCS TUTORIAL COLLEGE
GSCE · A-LEVEL · NVQ
Saturday school · English · ESOL · EFL
Language Classes · Foundation Degrees
Short courses · Retakes
Monday - Saturday
9,00am-7,00pm
GUARANTEED RESULTS
Fitzgerald House Willowcourt Avenue
Kenton Harrow Middx. HA3 8ES
A Department for Educationand Skills (DfES) registered school
Tel: 0208 909 1432


Balbir Sudera
Niraj's Jewellers Ltd.
Claims/Appraiser/Assessor Advisor/jeweller
136 Uxbridge Road, Hays, Middlesex, London UB2 0JH
Tel: 020 8573 9223 Fax: 020 8573 0875
Mobile: 07985 416 633

KERALA AYURVEDA
In its purest form now at Southall and Wembley


*Are you suffering from any ofthe following Chronic/ Acute Disease?*
ARTHRITIS
SPONDYLITIS
FROZEN SHOULDER
SLIP DISC
RHEUMATISM
MUSCLE PAINS
JOINT PAINS
DEPRESSION
PSORIASIS
MIGRAINE
STRESS&STRAIN
PILES
OBESITY
SINUSITIS
ECZEMA
INSOMNIA
*Kerala's age-old Ayurvedic Panchakarma treatments are veryeffective fortreating such diseases. We have established an Ayurvedic Centre in Kerala's traditionalway at the following address to undertake these treatments forthe suffering people at London and are manned by well-qualified & experienced Ayurvedic Doctors and Ayurvedic Panchkarma technicians from Kerala, India.*
NACS Kerala Ayurveda
Also we provide Ayurvedic Health Rejuvenation treatments through traditional medicated oil massages, steam bath etcc and beauty therapies using herbal mixtures.
CALL FOR APPOINTMENT AND FREE CONSULTATION
8 Grand Parade, Forty Ave, Wembley
Tel: 020 8908 4666
07866 687 216
CALL FOR APPOINTMENT AND FREE CONSULTATION
60 King St, Southall, MiddlesexUB2 4DB
Tel: 020 8571 9111
07958 539658
Website: KeralaAyurveda.co.uk/santhigramAyurveda.com Email: nacsayurveda@lycos.co.uy

# " இபடிப் பார்த்தா கண பேருக்கு காசு குடுக்க வேணும். முதல்ல லண்டன படியங்கோ! "

## ஏமாற்றப்பட்டவருக்குக் கிடைத்த பதில்

லண்டனில் தீவிர அரசியல் ஈடுபாடு உடையவரும் முன்னாள் யாழ் கவுன்சிலருமான கனேந்திரன் தன்னை பணமோசடி செய்ததாக பேரின்பம் பரமானந்தம் (லாபீர்) தெரிவிக்கிறார். தனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தங்கை, மனைவி, மூத்தமகள் ஆகியோருக்கு தனது ஸ்பொன்சரில் விசா எடுத்துத் தருவேன் என்று ஏமாற்றி பண மோசடி செய்ததாக பேரின்பம் பரமானந்தம் (லாபீர்) உதயனுக்குத் தெரிவித்தார். கனேந்திரன் தன்னிடம் 1200 பவுண்களைப் பெற்றுவிட்டு தன்னை ஏமாற்றிவிட்டதாக பரமானந்தம் குற்றம்சாட்டுகிறார். அண்மையில் இடம்பெற்ற அரசியல் கூட்டங்களில் அறிமுகமாகிய கனேந்திரன் தன்னை நம்ப வைத்து கழுத்தறுத்த விட்டதாக தனது வேதனையை



வெளிப்படுத்தினார் பரமானந்தம்.

அண்மையில் ஒரு அரசியல் கட்சியையும் உருவாக்கியுள்ள கனேந்திரனிடம் ஒக்ரோபர் 09, 11, 13 ஆம் திகதிகளில் முறையே 620 பவுண், 220 பவுண், 200 பவுண்களை வழங்கியதாகவும் பின் மேலும் 200 பவுணும் 10 பவுணுமாக மொத்தம் 1200 பவுண்களை வழங்கியதாகவும் 200 பவுண்களையே திருப்பித் தந்ததாகவும் பரமானந்தம் தெரிவித்தார். (படம்: பணம் கொடுத்த குறிப்புகளுடன் பரமானந்தம்.)


### பரமானந்தனின் சோகக் கதை

அண்மையில் மூதூரில் இடம்பெற்ற மோசமான இராணவ நடவடிக்கைகளால் எனது குடும்பம் திருமலைக்கு இடம்பெயர்ந்தது. நாளுக்கு நாள் நிலமை மோசமடைந்ததால் குடும்பத்தினரை பற்றிய தவிப்பு என்னிடம் இருந்தத அச்சந்தர்ப்பத்தில் என்னை அணுகிய கனேந்திரன் தன்னால் அவர்களுக்கு விசா எடுத்துத்தர முடியும் என்று உறுதி கூறியது எனக்கு பெரும் ஆறுதல் அளித்தது.

கனேந்திரன் என்னை அணுகிய முறை, கனவான் போல் உடை உடுத்தும் நாகரிகம், அவருக்கு இருந்த தொடர்புகள் இவற்றால் நான் கனேந்திரனை முழுமையாக நம்பினேன். இவரை நம்பி எனது குடும்பத்தினர் ஒக்ரோபர் நடுப்பகுதியில் கடன்பட்டுக்கொண்டு கொழும்பு வந்தனர். ஆட்டுப்பட்டித் தெருவில் உள்ள லொட்ஜில் அவர்கள் தங்கினர். வந்தவுடன் அவர்கள் பாஸ்போட்டுக்கு விண்ணப்பித்து அதனையும் எடுத்து கனேந்திரனின் தப்பியின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

தம்பி கொழும்பில் எல்லா வேலைகளையும் செய்து கொடுப்பார் என்று எனது மனைவியிடமும் தொலைபேசியில் கதைத்த முறை இன்னமும் என் கண்முன்னால் உள்ளது. எனது மகளிடம் எப்படி எம்பசியில் கதைக்க வேண்டும் என்றெல்லாம் கனேந்திரன் சொல்லிக் கொடுத்தார். என்னால் இதனையெல்லாம் சந்தேகப்பட முடியவில்லை.

ஒக்ரொபர் 20 என்று நினைக்கிறேன் லண்டன் வந்து இறங்கப் போகிறார்கள் வீடுகளை தயார் பண்ணும் என்றெல்லாம் கனேந்திரன் கூறுகிறார். ஆனால் அங்கு கனேந்திரனின் தம்பி எனது குடும்பத்தினரை சந்திக்கவேயில்லை. விசா ஒழுங்குகள் செய்யப்படவுமில்லை.



காலம் தாழ்த்தி எல்லாம் கைமீறிப் போனபின்பே எனக்கு சந்தேகம் தட்டியது. நான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தேன்.

சரி ஏமாற்றியது வரை போகட்டும் பணத்தைத் தரும்படி கேட்டேன். இப்படிப்பார்த்தா நான் கனபேருக்கு கொடுக்க வேணும். முதல்ல லண்டனை படியும் என்று கனேந்திரன் சொன்னார். நீன் என்ன செய்ய ஏலுமோ செய்யும் உம்மால ஒன்றும் செய்ய முடியாது என்று எனக்கு சவால்விட்டார்.

நான் இப்பவும் வேலை தேடிக்கொண்டிருக்கிறன். எனது குடும்பத்திலயும் பல பேர நான் உள்நாட்டு யுத்தத்தில இழந்திட்டன். இப்ப என்ர நிலை பனையாலை விழுந்தவனை கனேந்திரன் ஏறி மிதிச்சது மாதிரித்தான் இருக்கு.

### கனேந்திரனின் வாக்க மூலம்

நான் ரிக்கற் போடு வதற்கே பணம் வாங்கினேன். விசா எடுத்துத் தருவதாக உறுதி எதுவும் அளிக்கவில்லை. நான் உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் மாட்டி விட்டேன்.

கனேந்திரன் (படம்) ஏற்கனவே நிதி முறைகேடுக ளுக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். இவ் அறிவித்தல் இலங்கை தமிழ் தேசியப் பத்திரிகைகளிலும் வெளியாகி இருந்தது.

Reported by TJEABALAN

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards

Promet Technology Ltd.
Architectural and Structural Steelwork
Call us on:
020 8965 0500
or Fax:
020 8965 3030

MIDDX TYRES LTD



NEW, PART WORN & REMOULDS MOT PREPERATIONS, STEERING
020 8813 91 54 / 84
EXHAUSTS, WHEELS, SUSPENSION, 4 WHEEL ALIGNMENTS, BRAKES
41 - 43 The Green, Southall, Middx
WWW.MIDDXTYRESLTD.COM

skylord travel
Skylord Travel Special Offers
Bangalore from £325 Bombay from £265 Chennai from £325
Calcutta from £365 Colombo from £380 Delhi from £265
Hyderabad from £370 Trivandrum from £325
Above Fares are nett exclude taxes & Fuel Surcharges
Eastcote : 020 8582 1111 London : 020 7388 8111 Southall : 020 8537 1111

Hyundai's opened London...
...What a wise choice



HYUNDAI
HYUNDAI LONDON 020 8457 6660 Edgware Road, London, NW9 7BN www.hyundai.co.uk/HyundaiLondon

# பழங்கால கிரீடம், செப்புத் தகடு

காஞ்சிபுரத்தில் பாதாள சாக்கடை திட்டத்துக்கான பள்ளம் தோண்டும் போது பழங்கால கிரீடம், செப்புத் தகடு கொண்ட பானை கண்டெடுக்கப்பட்டது.

பெரிய காஞ்சிபுரம் தர்காவுக்கு பின்புறம் அங்காளம்மன் கோயில் தெரு உள்ளது. இங்கு பாதாள சாக்கடை இணைப்பு திட்டத்துக்காக நகராட்சி பணியாளர்கள் பள்ளம் தோண்டினர்.

அப்போது 5 அடி ஆழத்தில் வினோத சத்தம் எழும்பியது. மேலும் நன்றாக தோண்டிய போது ஒரு பானை கிடந்தது. அதை வெளியில் எடுத்து பார்த்த போது பானையின் உள்ளே ஒன்றேகால் அடி உயர வெள்ளி கிரீடம், 30 கடவுள் உருவங்கள் பொறிக்கப்பட்ட செப்புத் தகடு உள்ளிட்டவை எடுக்கப்பட்டன.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் நகராட்சி தலைவர் வி.ராஜேந்திரன், துணைத்தலைவர் டாக்டர் ஜி.சம்பந்தம் ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்ரு செய்தனர்.

காஞ்சிபுரம் தாசில்தார் செல்வராஜுும் பள்ளத்தில் எடுக்கப்பட்ட கிரீடம், செப்புத் தகடுகளை ஆய்வு செய்தார். தொல்லியல் துறைக்கு தகவல் அளிக்கப்பட்டது.

தொல்லியல் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்த பின்னர் அக்கிரீடம், செப்புத் தகடு எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்பது தெரியவரும்.

அங்காளம்மன் கோயில் முன்பு மேசை போடப்பட்டு அதன் மீது 2 பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை அப்பகுதி மக்கள் வந்து ஆர்வமுடன் பார்வையிட்டு சென்றனர்.

## நான்காவது தடவையாக ரி.பி.சி வானொலி தாக்கப்பட்டது இருந்தும் மீண்டும் வானலைகளில் ரிபிசி ஒலிபரப்பு



நான்பாவது தடவையாகவும் தாக்குதலக்கு உள்ளான ரிபிசி வானொலி மீண்டும் தனது சேவையை ஆரம்பித்து உள்ளது. நவம்பர் 24ல் நள்ளிரவு வானொலி நிலையத்திற்குள் புகுந்த சிலர் வானொலி உபகரணங்களை சேதப்படுத்தியும் களவாடியும் உள்ளனர். வானொலியை மீண்டும் பலமுள்ள வகையில் பாதுகாப்புடன் செயற்படுத்துவதற்கு சுமார் 20,000 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்டுகள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1999ல் ஆரம்பிக்கப்ட்ட இவ்வானொலி இதற்கு முன்னரும் மூன்று தடவைகள் தாக்கப்பட்டு உள்ளது.

"எமது ஜனநாயகக் குரல் எவ்வளவு வலிமையானது என்பதையே இக்கொடுஞ் செயல்கள் எமக்கு உணர்த்துகின்றன" என இத்தாக்குதல் தொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் வானொலி இயக்குநர்களில் ஒருவரான தம்பா தெரிவித்துள்ளார்.

"வன்முறையினாலும், பயங்கரவாதத்தினாலும், மிரட்டல்களினாலும் மக்களின் குரலை ஒடுக்கி அதன் மூலம் தமது காட்டுத் தர்பார் அரசியலை நடத்தி வரும் ஜனநாயக விரோத சக்திகளின் ஈனத்தனமான செயலே இது" என மிகவன்மையான கண்டன அறிக்கையை ரிபிசி நிர்வாகம் வெளியிட்டு உள்ளது. "சில தொழில் நுட்பக் கருவிகளை திருடுவதன் மூலம் அல்லது அழிப்பதன் மூலம் மக்களின் குரலை ஒடுக்கி விடலாம் என நப்பாசை கொண்டிருக்கும் இச்சமூக விரோத சக்திகள் தற்காலிகமாகவே வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை காலம் உணர்த்தும்" என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## அதிகரித்துவரும் தெருவோர வன்முறைகள் - சில உளவியல், சமூகக் காரணிகள்

தெருவோரத்தில் இடம்பெறும் தாக்குதல்களும் கொள்ளைகளும் ஏன் கொலைகளும் கூட பொருளாதாரத் தேவைகளுக்காக மட்டும் அன்றி வேறு பல மனோவியல், சமூக காரணங்களுக்காகவும் இடம் பெறுவதாக பொருளாதார சமூக ஆராயச்சிக் கவுன்சிலின் உதவியுடன் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று எடுத்துக்காட்டுகிறது.

இத்தகைய வன்முறைகளில் ஈடுபட்டு சிறையிலுள்ள 1200 குற்றவாளிகள் மத்தியில் இவ்வருடம் நடத்தப்பட்ட இவ் ஆய்வின் மூலம் மகிழ்ச்சியாக காலத்தை போக்குவதற்கும், தாம் பகட்டாக வாழ்வதை மற்றவர்களுக்கு காட்டுவதற்கும் சிலர் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரிய வருகின்றது. தான் ஒருவித உந்து சக்தியை அனுபவிப்பதாகவும், போதை வஸத்துவை விட இக்கொள்ளை நடவடிக்ககைளுக்கு தான் அடிமையாகி உள்ளதாகவும் ஒருவர் தெரிவித்துள்ளார். சிலர் சண்டையிடுவதற்கான ஆசையால் உந்தப்பட்டும் சிலர் உத்தியோகபூர்வமற்ற வகையில் நீதியை நிலைநாட்டுவதற்காகவும் தெருவன்முறைகளில் ஈடுபடுவதாக தெரிய வருகின்றது.

## பிரித்தானியாவில் £1.5 பில்லியன் கடன் பாக்ளேஸ் வங்கியால் ரத்து

பிரித்தானியாவின் பிரபல Barclays வங்கயின் கடன்அட்டை(credit card) இவ்வருடம் வங்குரோத்துநிலை காரணமாக தனது வாடிக்கையாளர்களின் £1.5 பில்லியன் கடனை தான் ரத்துசெய்ய வேண்டிய நிவை உருவாகுவதாக 28-11-06 அன்று தெரிவித்துள்ளது. கடந்தவருடம் இவ்வங்கியின் வாடிக்கையாளர்கள் £1.1 மில்லியன் தொகையில் வங்குரோத்தடைந்தார்கள். கடந்த ஆறு மாதகாலமாக தனிப்பட்ட கடன் மற்றும் கடன் அட்டை என்பவற்றாலான கடன்களில் கிழமைக்கு £31 மில்லியன் வீதம் கடன் ரத்தினை டீயசஉடயலள செய்துள்ளது.

1966ம் ஆண்டு முதலில் விநியோகப்பட்ட இக்கடனட்டைகளை இன்று £11.2 மில்லியன் வாடிக்கையாளர்கள் கொண்டுள்ளார்கள். அதேவேளை ஒட்டுமொத்தமாக டீயசஉடயலள ன் சகலபிரிவுகளும் இவ்வருடம் £7மில்லியன் வரிக்கு முன்னான இலாபத்தினை ஈட்டுகின்றன எனத் தெரியவருகிறது. பிரித்தானியாவில் இவவருடம் தமது கடன்சுமை தாங்கமுடியாமல் 100.000 பேர் வங்குரோத்து நிலையை அடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2005 நடுப்பகுதியிலிருந்து உயர்ந்துவரும் வீட்டுவிலை




பிரித்தானிய நிலப்பதிவுத் திணைக்கள தகவலின்படி வீட்டு விலை அதிகரிப்பு கடந்த் 17 மாதகாலமாக ஏற்றமுற்று வருகின்றது. இங்கிலாந்திலும் வேல்சிலும் வருடாந்த வீட்டு விலை அதிகரிப்பு வீதம் 7% மாக இருக்கையில் வீட்டு விலைகள் செப்ரெம்பரில் 1.4% அதிகரிப்பையும். ஒக்ரோபரில் 1.2% அதிகரிப்பையும் அடைந்துள்ளன. நாட்டின் தென்கிழக்கில் குறிப்பாக இலண்டன் நகரம் அதியுயர் வீதமான 9.6% விலை அதிகரிப்பு வீதத்தை கொண்டுள்ளது. இதற்கு எதிர்மாறாக வடமேற்கிலும் கிழக்கு மற்றும் மத்தியபிரதேசத்திலும் வீட்டு விலைகள் வீழ்ச்சியுற்றுள்ளன. இந்தப்போக்கில் அதிக மாற்றம் ஏற்பட முடியாதெனினும், வீட்டு வருமானங்களை விட வீட்டு விலைகள் மிக அதிகமாக அதிகரிப்பதால் 2007 புதுவருடத்துடன் வட்டிவீதம் அதிரிப்பதுடன் வீட்டுச்சந்தை (housing market) ஓரளவு சமநிலையடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வடமேற்கு லண்டனில் சூறாவளி: நூற்றுக்குமதிகமான வீடுகள் சேதம் 6 பேர் காயம்

கடந்த 7-12-06 வியாழனன்று வடமேற்கு லண்டனில் கென்சல் றைஸ் (Kensal Rise) என்னும் இடத்தில் வீசிய புயற்காற்றினால் பொதுமக்கள் 6 பேர் காயமடைந்ததுடன் 100க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துமுள்ளன. Brent கவுன்சிலால் அல்பேட் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக புகலிடத்தில் 70 பேர் தஞ்சமடைந்துள்ளனர். இதனைத்தொடர்ந்து தீயணைப்புப் படையினரால் ஆறு தெருக்கள் மூடப்பட்டு நடத்தப்பட்ட தேடுதல்களின் போது புயலால் பாதிக்கப்பட்ட 38 வீடுகள் உடைத்துக் கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளதாக தெரியவருகிறது. மணிக்கு110மைல் வேகத்தில் 60 செக்கன்கள் இப்புயற்காற்று வீசியதாக தெரிய வருகிறது. பிரித்தானியாவில் வருடாந்தம் 50 புயல்கள் இடம்பெறுவதால் இந்நாடு ஜரோப்பாவில இவ்விடயத்தில் முதலிடம் பெறுகின்றது.



## பிரித்தானியாவில் வறியவர்களைக் கடினமாகத் தாக்கும் நீரழிவுநோய்

பிரித்தானியாவின் மிக ஏழ்மைநிலையில் வாழும் சமூகங்கள் வகை-2ஐ சேர்ந்த நீரழிவு நோயினால் ஏனைய வசதிபடைத்தவர்களை விட இரண்டரை மடங்கு அதிகமாக பாதிக்கப்பட இடமுண்டு என ஆய்வுகள் காட்டுகின்றன. நீரழிவு சம்பந்தமாக ஈடுபாடு கொண்ட அமைப்புகளால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வறிய மக்கள் நீரழிவின் பாரதூரமான விளைவுகளான இருதய நோய் பாரிசவாதம். சிறுநீரகப்பாதிப்பு என்பவற்றால் மூன்றரை மடங்கு அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் எனக் கூறுவதனுடன் சமூக ஏற்றத்தாழ்வை கையாள்வதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளது.

# badly fitted plug

# இரு பரம்பரையை சில விநாடிகளில் அழித்தது

அக்சனா ரவீந்திரன் (2), வேலுப்பிள்ளை சிவஞானம் (77), தனலக்ஸ்மி சிவஞானம் ஆகியோரைப் பலி கொண்ட தீ விபத்திற்கு, சீரற்ற முறையில் இணைக் கப்பட்ட மின்உபகரணமே (badly fitted plug) காரணம் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவ்வாண்டு யூலை 3ல் விம்பிள்டனில் ஓல் இங்கிலண்ட் கிளப்பிற்கு அருகில் ஓத்தர் வீதியில் இருந்த ராசையா ரவீந்திரனின் கடையே தீவிபத்துக்கு உள்ளானது.

சரியாக சொக்கற்றில் பொரத்துப்படாத (was not put fully in its socket) எயர்கொன்டிசினரின் பிளக்கினாலேயே இத்தீ விபத்து நிகழ்ந்துள்ளது என நவம்பர் முடிவில் இடம்பெற்ற விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சரியாக பொருத்துப்படாத சொக்கற்றில் இருந்து கசிந்த மின்சாரம் அருகில் இருந்த குளிரூட்டியை உருக்கி தீயை ஏற்படுத்த, அத்தீ கடையில் இருந்த பொருட்களுக்குப் பரவி கட்டடம் முழுவதையும் ஆட்கொண்டது என விசாரணையின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

ஏற்பட்ட தீயை அணைக்க நான்கு தீயணைப்பு வண்டிகளில் இருந்து 300 கலன் தண்ணீர் பாய்ச்சப்பட்டதாகவும் இருந்தும் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் மூன்று உடல்களையே கண்டெடுத்ததாகவும் தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர். புகையை சுவாசித்ததாலேயே மரணம் சம்பவித்ததாக மரண விசாரணை முடிவில் தெரிவிக்கப்பட்டது. இது ஒரு விபத்து மரணம் என Coroner Paul Knapman தீர்ப்பளித்தார்.




தீயில் கருகிய அரும்பு அக்சனா (2)

அன்று மிகவும் வெக்கையாக இருந்ததால் கதவுகளும் யன்னல்களும் திறந்தே இருந்தது தீ பரவுவதற்கு முக்கிய காரணமாக இருந்ததாக New Cross fire investigation unit யைச் சேர்ந்த Stephen Lewis தெரிவித்தார். பட்டப்பகலில் இடம்பெற்ற இவ்விபத்தில் மூவர் தப்பிக்க முடியாமல் சிக்கிக் கொண்டது மிகவும் வேதனையான நிகழ்வு என அவர் மேலும் தெரிவித்தார்.

ரவிந்திரன், மாற்று, கனவுகள் நிஜமானால், மண் ஆகிய படங்களை இயக்கிய புதியவனின் (சண்) சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. ரவீந்திரன் தம்பதிகளின் மூத்தமகள் ருக்ஷனா அச்சமயம் பள்ளிக்குச் சென்றிருந்ததால் அவர் விபத்தில் இருந்து தப்பித்துக் கொண்டார். வவுனியா நெழுங்குளத்தைச் சேர்ந்த திரு சிவஞானம் வவுனியா மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் கொழும்பு றோயல்கல்லூரியின் ஆசிரியராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



மேல்: வேலுப்பிள்ளை சிவஞானம் (77), அவருடைய மனைவி தனலக்ஸ்மி சிவஞானம் உடன்.



அருகில்: இவ்வாண்டு யூலை 3ல் விம்பிள்டனில் ஓல் இங்கிலண்ட் கிளப்பிற்கு அருகில் ஓத்தர் வீதியில் இருந்த ராசையா ரவீந்திரனின் கடையில் ஏற்பட்ட தீயை தீயணைப்புப் படையினர் அணைக்க முற்படுகின்றனர்.

லண்டனில் வீடுகளில் 6,355 தீ விபத்துக்கள் 2005/06 காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. மேலும் இதே காலப்பகுதியில் 1,156 திட்டமிட்டு தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றள்ளது. 2000 முதல் 2004 வரையான காலப்பகுதியில் லண்டனில் ஆண்டுக்கு 53 பேர் வீடுகளில் ஏற்படும் தீயினால் மரணமடைகின்றனர். 2005/06 காலப்பகுதியில் இத்தொகை 50 ஆகக் குறைந்துள்ளது. தீ விபத்துக்களைத் தடுப்பதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள இவ்விணையத் தளத்தைப் பார்வையிடவும். www.firekills.gov.uk/handbook/pdf/handbook-english.pdf

For All Your Toyota Motoring Needs
£250 OFF
any vehicle purchased at Jemca Toyota before 31st March 2007
Voucher discount applies to screen price. Voucher must be produced at time of interest.
DON'T PAY THE CONGESTION CHARGE GET A PRIUS
JEMCA TOYOTA
The Hyde, Edgware Road, London NW9 6BH
020 8203 1888

உதயனில் விளம்பரம் செய்ய
07957681944

THE EURO'S BEST PROFILES (DOUBLE GLAZERS)
Manufatrures, Suppliers and Installers of:
Double glazed windows, Doors, Patio Doors, Conservettories and Porches in uPVC & Aluminum (HOME IMPROVEMENT)
407 LEY STREET, ILFORD, ESSEX, IG1 4AB
TEL/FAX: 020 8478 8833
MOBILE: 07958 227 814/07950 446 978
www.bestprofiles.com

Motor Masters
Top Quality Servicing & Repair on all Makes of Vehicles
M.O.T While You Wait
Unit 7 The Squirrel Trading Estate, Viveash Close, Nestles Ave, Hayes, Middlesex UB3 4RZ
Tel: 020 8561 9100
Fax: 020 8573 8641

MANGALA MOTORS
High Quality at Sensible Prices
* Car/Van Sales
* Full and Iterim service
* MOT & Mechanical Repairs
* Professional Technician
* Fully Guranteed Job
Call On
020 8203 6655
Unit 1, 3 & 4, The Bridges
Aerodrome Road, London NW4 4SS

Auto - Right
MOT's CLASS 4&7 (While you wait)
Mechanical and Crash Repairs, Servicing & Insurance work undertaken
(Courtesy car available on insurance work)
Unit 6, Endsleigh Industrial Estate, Endsleigh Road, Southall, Middx. UB2 5QR
Tel: 020 8843 1754

# உயிர்க்கொல்லி நோய்: புற்றுநோய்

இன்று உள்ள மிகவும் பயங்கரமான நோய்களில் புற்றுநோய் மிகவும் முக்கியமான ஒன்று. அண்மையில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு நீண்டகாலம் வாழ்ந்த போதிலும் அவருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியது புற்றுநோயே. சூரியஒளி, மொபைல் போன், சிகரட், தண்ணீர், சாப்பாடு என்று எதை எடுத்தாலும் கான்சர் வரும் என்றாகிவிட்டது. கான்சர் என்றால் நண்டு என்று அர்த்தம். அதாவது நண்டு மறைந்துவாழும் இடத்தின் நுழைவாயில் சிறிதாக இருக்கும் ஆனால் அதன் உட்பகுதி பரந்து ஒழுங்கின்ற விசாலமானதாக இருக்கும். புற்றுநோயின் பரம்பலும் அவ்வாறே இருக்கும்.

வரைவிலக்கணப்படி கான்சர் என்றால் ஒழுங்கின்றிய, கட்டுப்பாடின்றிய கலங்களின் வளர்ச்சி என்று குறிப்பிடுகிறார்கள். இதை இரசாயனப் பதார்த்தங்கள், கதிர் இயக்கங்கள், தொடர்ச்சியான தூண்டல், தேவையற்ற கலங்களில் மாற்றம் போன்ற காரணிகள் தூண்டுகின்றன. கான்சர் பொதுவாக உடல் தொழிலில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதுவரை 200 வகையான கான்சர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் மிகவும் முக்கியமானவை மார்பு புற்றுநோய், தோல் புற்றுநோய், இரத்த புற்றுநோய், சுவாச புற்றுநோய், குடல் புற்றுநோய், இலிங்க புற்றுநோய் என்பன. இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாடுகளில் வாய் புற்றுநோயே அதிகமாகும். ஏனெனில் வெற்றிலை, பாக்கு போடுதல், சுருட்டு பாவித்தல் போன்ற காரணங்களால்.

புற்றுநோயை நோயின் அறிகுறிகள் மற்றும் பரிசோதனைகள் மூலம் இலகுவாக அறியலாம்.

## புற்றுநோய்க்கான காரணி

பொதுவாக சாதாரண கலம் பல காரணிகளின் தூண்டலினால் அபரீத வளர்ச்சிக்குள்ளாகி உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இதற்கான காரணிகள் பரம்பரையாக இருக்கலாம், அல்லது இரசாயன கதிர்வீச்சு, பௌதீக மாற்றங்கள், உளவியல் மாற்றங்கள் போன்றவையாக இருக்கலாம்.

## இவற்றுக்கான பரிசோதனைகளாவன:

1. கட்டிகளில் இருந்து வெளியேறும் நீரை பரிசோதித்தல்
2. குருதி, சிறுநீர், மலம் பரிசோதித்தல்
3. கட்டிகளின் வளர்ச்சியை ஆராய்தல் போன்றன.

## புற்றுநோயின் அறிகுறிகள்:

1. ஒழுங்கற்று உடல் நிறை குறைதல்
2. தொடர்ச்சி அற்ற வயிற்றுவலி
3. ஒழுங்கற்ற தலைவலி
4. உணவை விழுங்குவதில் கடினம்
5. தொண்டையில் புண், கட்டிகள் தோன்றுதல்
6. ஏற்கனவே தோன்றிய கட்டிகளில் ஏற்படுகின்ற மாற்றம் ஆகியன.

## இதற்கான சிகிச்சை முறைகள்

1. அறுவைச்சிகிச்சை - கட்டியை வெட்டி அகற்றுதல், அல்லது நோய்வாய்ப்பட்ட பகுதியை வெட்டி அகற்றுதல்
2. இரசாயன மருந்துகள் பாவித்தல்
3. கதிர்வீச்சு முறை அல்லது கறன்ற் பிடித்தல்
4. ஹோமோன் மருத்துவ முறை
5. அப்படியே விட்டுவிட்டு ஒவ்வொரு அறிகுறிகளுக்கும் மருந்துகளைக் கொடுத்து குணப்படுத்துதல் - இதுவே இறுதி முறையாகும்.
6. உணவுகள் மூலம் கட்டுப்படுத்தல் - இதற்குள் ஆயுள்வேதம், அக்குபஞ்சர், மசாஜ் செய்தல் என்பன அடங்கும்.


## புற்றுநோய் வராமல் தடுக்க பயனுள்ள வழிகள்

1. சிவப்பு இறைச்சிவகை, சீனிவகை, செயற்கையாக உருவாக்கப்பட்ட மா, உப்பு, சாராயம், கோப்பி, தேனீர் வகைகளை தவிருங்கள் அல்லது நன்றாக குறையுங்கள்.
2. உடன் மரக்கறிவகைகள், பழங்கள், கடலை வகைகள், சோளம், கௌப்பி போன்ற கடலை வகைகளை அதிகமாக உண்ணுங்கள்.
3. புகைத்தலை உடன் நிறுத்துங்கள்
4. விற்றமின் A, C, E மற்றும் மீன் எண்ணெய் போன்ற கொழுப்பமிலங்கள் எடுக்கலாம்.

DR சிவக்குமார்

5. ஒழுங்கான முறையில் Multivitamins, கனியுப்புக்கள் எடுக்க வேண்டும்.
6. அதிகமான சூரிய ஒளி படுவதை

**7. ஒழுங்கான உடற்பயிற்சி முக்கியம்.**
**8. ஓய்விற்கு நேரம் ஒதுக்குங்கள்.**
**9. எப்பொழுதும் நல்லதையே நினையுங்கள், உற்சாகமாக இருங்கள்.**
**10. மருத்துவ ஆலோசனையை ஒழுங்காக பெற்றுக்கொள்ளுங்கள்.**




Woodstyle
Kitchens & Bedrooms Ltd
Manufacturers of Superior Bedroom, Kitchen & Bathroom Units, Doors and Assessories
East London: Unit 4A R/O 328 Romford Road (via Palmerston Road) - Forest Gate London E7 8BS
Tel: 020 8519 0100
Fax: 020 8555 1513
Essex: Unit 3 Ash Industrial Estate - Merring Way - Flex Meadow - The Pinnacles - Harlow - Essex - CM19 5TJ
Tel: 01279 442100
Fax: 01279 442500
www.woodstyleuk.com

BITTU'S
HAIRS & BEAUTY
Tel: 020 8571 9912
Mob: 0781 882 2226
172 The Broadway Middlesex, Southall, UB1 1NT

beauty Wholesale Ltd
FREETRESS World's Finest 100% HUMAN HAIR
World's Most Advanced Synthetic Hair
MILKYWAY 100% HUMAN HAIR
FOR TRADE ENQUIRY CALL 020 7381 2000 / 41

# இலங்கை அரசு அனுமதி மறுத்ததால் இலங்கைக்கு நான் செல்ல இயலவில்லை கருணாநிதி பேச்சு

இலங்கை அரசு அனுமதி மறுத்ததால் இலங்கைக்கு நான் செல்ல இயலவில்லை என்று கருணாநிதி கூறினார்.

இலங்கை மாணவர்கள்

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாக வந்துள்ள பள்ளி மாணவர்கள், தமிழகத்தில் பள்ளித் தேர்வு எழுதுவதற்கு அனுமதி வழங்கிய முதல்–அமைச்சர் கருணாநிதியை சந்திரகாசன் தலைமையில் 100–க்கும் மேற்பட்டவர்கள் நேற்று மாலை அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

அப்போது அவர்கள் மத்தியில் கருணாநிதி பேசியதாவது:–

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையிலே நடைபெறுகின்ற அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்ற காரியங்கள் எந்த அளவுக்கு தமிழ்நாட்டிலே உள்ள எங்களையெல்லாம் பாதித்திருக்கிறது என்பதை சொல்லத் தேவையில்லை, உலகமே அறிந்த ஒன்று.

அனுமதி தரவில்லை

இந்த 10, 15 ஆண்டு காலமாக வந்த உங்களையெல்லாம் வாழ வைப்பதற்கு உங்களுடைய கடமைகளை ஆற்றுவதற்கு உங்கள் எதிர்காலத்தை செதுக்குவதற்கு நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி தான் நடைபெற்றிருக்கிறதே அல்லாமல், உங்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி நீங்கள் இங்கே வந்து என்னைப் பார்ப்பதைப் போல நான் அங்கே வந்து உங்களையெல்லாம் பார்க்கின்ற ஒரு காலம் வர வேண்டுமே என்ற கவலை எனக்கு மிகவும் உண்டு. அது என்னவோ இலங்கைக்கு வர நான் பல முறை முயன்றுங்கூட, நடைபெறவில்லை. இயலாமல் போய்விட்டது. ஏன் இயலவில்லை என்றால், இலங்கையிலே இருந்த, இருக்கிற – அரசு எனக்கு அனுமதி தரவில்லை.

சில நேரங்களில் அங்கே ஏற்பட்ட குழப்பங்களின் காரணமாக நான் வருவது நல்லதல்ல என்று அங்கிருந்த அரசும் எனக்கு செய்தி அனுப்பியது. இங்குள்ள அரசும் என்னைத் தடுத்து நிறுத்தியது. நான் ஒரு முறை இந்திய பிரதமர் இந்திரா காந்தியிடம் இதைச் சொன்ன போது, நான் ஏற்பாடு செய்யட்டுமா, நீ போய் வருகிறாயா என்று கூடக் கேட்டார்கள். அப்போது இலங்கையிலே இதைவிட அதிகமாகக் கொந்தளிப்பான சூழ்நிலை. எனவே அந்தப் பயணமும் தடைபட்டது.

Continues Page 11

Asian Funeral Care Ltd
*A personal tailored service to meet every induvidual religious cultural need at reasonable rates
*Private viewing and Service Hall
Tel :0208 909 3030
Mob:07970 934623

Popular Builders & Merchants
Specialist in:
Bath Shower, Shower Cubical, Jacuzzi, Steam Cabin, Vanity Units, Sanitary Ware, Wall Cladding, Plumbing, Building Material and DIY & Granite Floor Marble Tiles
020 8471 1677
293-295 High Street North, Manor Park, E12 6SL
popularbuilders@hotmail.com

Prestige WINDOWS & DOORS LTD
Unbeatable Prices & Quality
Call for free Quote
Fensa Registered
T: 020 8503 4731
F: 020 8548 0466
Windows make houses
156 - 158 KATHERINE ROAD EASTHAM LONDON E6 1ER
prestigewindows@hotmail.co.uk

A&G WINDOWS LTD
Manufacturers & Installers of Quality Double Glazing in U.PVC. Windows, Doors, Patio Doors, Porches, Conservatories
FREE ESTIMATE
Unit6, Derby Road, Hounslow Middx TW3 3UH
Tel: 020 8572 5567

# ஐஸ்வர்யா ராய்க்கு தபாலில் யூரோநோட்டுகள்

நடிகையாக மாறிய உலக அழகி ஐஸ்வர்யா ராயின் இந்திய முகவரிக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட சாதாரண பொதியொன்றில் 40,000 டொலர் பெறுமதியான யூரோ நோட்டுக்கள் இருந்ததை சுங்கப் பகுதியினர் மோப்பம் பிடித்துக் கைப்பற்றி உள்ளனர். இப்பொழுது பொலிவுட் சுப்பர் நடிகையிடம் விளக்கத்தை எதிர்பார்த் திருக்கின்றனர்.

பிரகடனப்படுத்தப்படாத நோட்டுகள் கறுப்புப் பணமாக நடிகர்களிடம் போய்ச்சேர்வதென்பது சாதாரண விடயமானாலும், ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அவை அங்கு சென்றடைந்தது உலகச் செய்தியாகியுள்ளது. இந்தப் பணப்பொதி விவகாரம் ஐஸ்வர்யா ராய்க்குத் தெரியாமல் நடந்திருக்கலாமோ என்றும் சந்தேகம் எழுந்துள்ளது. தற்போது ராஜஸ்தானில் படப்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும் நடிகை ஐஸ்வர்யா ராய் இவ்விடயம் தொடர்பாக கருத்தேதும் தெரிவிக்கவில்லை. சுங்க அதிகாரிகளை இவர் விரைவில் சந்தித்து உரிமைகோராவிடில் ஐஸ்வர்யா ராயின் ஐஸ்வர்யம் ஸ்வாகா தான்.



சர்ச்சையில் மாட்டிய ஐஸ்வர்யா ராய்

ஏற்கெனவே ஐஸ்வர்யா ராய் மற்றொரு பொலிவுட் நடிகர் சல்மான் கானுடன் தொடர்புபடுத்தப்பட்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு விழிக்கிறார். இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் பாதாளக்கோஷ்டியின் தாதா ஒருவனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாக ஐஸ்வர்யாராயிடம் பீற்றிக்கொண்டிருந்த நடிகர் சல்மான் கானின் உரையாடல் இரகசியமாகப் பதிவுசெய்யப்பட்டு பத்திரிகைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இது போலிவுட் நடிகரை சட்டச்சிக்கலிலும் மாட்டிவைத்திருக்கிறது. அவருடன் ஐஸ்வர்யாராய் கொண்டுள்ள தொடர்பு அவரது நல்லதுக்கில்லை என்று ஐஸ்வர்யாராயின் ஆதரவு வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

# மறைந்த மதியுரைஞரை கௌரவத்துடன் வழியனுப்பினர்

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் அவரது குடும்பத்திற்கும் மிக நெருக்கமானவர்கள் டிசம்பர் 17ல் தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர். வெள்ளைநிற வேட்டியும், வெள்ளை நிற ஷேர்ட்டும் அணிவிக்கப்பட்டு லண்டனில் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு, அஞ்சலியைச் செலுத்தினர்.

டிசம்பர் 20 இம்மலர்ச்சாலையில் இருந்து அலெக்ஸான்டிரா மாளிகைக்கு கொண்டு வரப்பட இருக்கும் அவரது உடல் காலை 8 மணிக்கு முதல் மாலை 3 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். பின்னர் அலெக்ஸாண்டிரா மாளிகையிலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஒரு மயானத்தில் பாலாவின் உடல் தகனம் செய்யப்பட்டது.



Ellis &Co Residential Sale & Letting
வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

Avis Property Agents
Sales, Lettings Commercial and Management
MORTGAGE AVAILABLE
PROPERTIES FROM LANDLORDS FOR PROF. TENANT
COMPETITIVE RATES
SALES, LETTINGS MANAGEMENT
69, HEADSTONE GARDENS, HARROW, HA2 6PJ.
Tel/ Fax: 020 8424 9811 Mobile: 07956 382 178
Web Site: www.avis4u.co.uk Email: info@avis4u.co.uk

VISION PROPERTY & MORTGAGES 020 8848 4030
www.visionestate.co.uk
- Purchase/Re-mortgages100%
- Up to 95% Buy-to-Let mortgages
- 100% commercial Loan-Shop/Restaurant
- Country court Judgements/Default/arrears
- No ProofIncome, No Proof Accounts, Any Citizen No Problem
- Full Management & Maintenance Commercial Property

Mortgage is not a cost - an investment with long time benefit
So why not pop in today to find our more
Vision Property & Mortgages 1104 Uxbridge Road, Hayes Middlesex, UB4 8QH
Raju: 07862 229 579
Tel. 020 8848 4030
Fax. 020 8848 3960

Panesar Electrical Co.
EST 1981
- Wylex 9 Way Split Load
- RCD+Main Switch
- 9 MCBs
ONLY £60
- Lux 10 Way Split Load
- RCD+Main Switch
- 10 MCBs
ONLY £39.50
- Lux 6 Way Split Load
- RCD/M/SU
- 6MCBs
ONLY £35
2 Gang 13a Sotcekts from £0,95
4 Inch Timer Fans from £9,95
2 Gang 13a Chrome Socket from £5
9 Inch Pendants from £0,95
www.lowvoltagedownlights.com pan77@hotmail.co.uk
362 - 364 HIgh Street, North Manor Park, London E12 6PH
Tel: 020 8472 1873 Fax: 020 8471 6271

GOLDMAN
www.goldmanestate.com
219 Broadway, Southall Middlesex, UB1 1NB
- Property Sales
- Property Lettings
- Property Management
- Commercial Loan Arrangement
- Life Insurance
- Mortgages
- Accountancy
- Pensions
020 8867 7711
020 8867 7733

PAMIR CARPETS & FURNITURES
SPECIAL OFFER
Laminate flooring from £6,99 per sqm
3 Bed Full House Carpet, Underlay & fitting £499 only
Free Estimating Delivery Fitting Underlay
020 8578 5080
405-407 Greenford Road Greenford

SAVER STORES CASH &CARRY LTD.
Specializing in soft drinks beers, wines & spirits! As well as food products, household and much more in store...
20 Kynoch Road, Eley Trading Estate, Edmonton, N18 3BD
T. + 44(0)208 884 2800 F. + (0)208 807 4081

Shyam JEWELLERS
Exporters, Importers & Wholesale of 22 Ct. Gold Jewellery
178 Ealing Road, Wembley
Middlesex HA0 4QD
Tel: 0208 900 0194
Fax: 0208 903 8790
Email: Shyamjewellers@hotmail.com

JMW SHOPFRONTS & SHUTTERS LTD
JMW SHOPFRONTS & SHUTTERS LTD
Unit 34-35-36 BarkingIndustrial Park
Alfreds Way Barking Essex IG11 OTJ
Tel: 020 8591 5760 / 020 8591 7637
Fax: 020 8591 2833
Email: jmw_shopfronts@hotmail.com

HAVE A TASTIEST TREAT AT
Chandni Chowk
CHANDNI CHOWK
RESTAURANT & SWEETS
754/756 GREEN LANE
DAGENHAM ESSEX RM8 1YT
T: 0203 222 2000
106 THE BROADWAY
SOUTHALL, MIDDLESEX, UB1 1QF
T: 020 8867 7200

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1 Importers, Distributors, Wholesalers and Retailers of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway, West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm - Sat 10am-5pm - Sun 10am - 2pm

### லண்டன் சினிமா தயாரிப்புக்களில் தடம் பதிக்கும்

# ஒரு இதயத்திலே...



இந்திய புலம்பெயர் கலைஞர்களின் நடிப்பில் லண்டனில் படமாக்கப்பட்ட 'ஒரு இதயத்திலே...' [illegible]ட்டத்திலேயே பலரதும் பாராட்டுக்களைப் பெற்று உள்ளது. ஒரு வர்த்தக சினிமாவுக்கான [illegible] அம்சங்களைக் கொண்டுள்ள இப்படத்தை ஸ்ரான்லி மனுவேற்பிள்ளை இயக்கி உள்ளார். [illegible]னின் கமராவின் கைவண்ணத்தில் 20 நாட்களில் இப்படம் முழுமையாக்கப்பட்[illegible] 2006 [illegible] விழாவில் சிறந்த [illegible] சிறந்த [illegible] [illegible]ளிப்பதிவாளர் (கமராமென்) ஆகியவற்றுக்கான விருதைப் பெற்றமை குறிப்[illegible] [illegible] நகைச்சுவைக் காட்சிகள் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.

[illegible]படத்தில் Vincent S Manuelpillai, J Mano Manuelpillai, Raji, Sarumathi Rajendran, Janaki [illegible], Navaraj Muthusamy, Ramesh Vethanayagam, Helga Yogarajah, Newton Gerard ஆகியோர் [illegible] பாத்திரத்தில் நடித்துள்ளனர். இவர்களுடன் இன்னும் 20 பேர் வரை துணை நடிகர்களாக நடித்துள்ளனர்.

[illegible] மீது இளம் மாணவிக்கு ஏற்படும் காதலை மையமாக வைத்து [illegible] நகர்த்தி உள்ளார் இயக்குநர் மனுவேற்பிள்ளை. இது அவரது முதற்படமாக இருந்தபோதும் [illegible]பெயர் சினிமாவைப் பொறுத்தவரை ஒரு இதயத்திலே [illegible] ஆழமாகப் பதித்துள்ளது.
## விம்பம் குறும்பட விழா



'விம்பம்' கலை இலக்கிய அமைப்பினரின் 2006ஆம் ஆண்டிற்கான குறுந்திரைப்பட விழாவானது நவம்பர் மாதம் 25ல், லண்டனில் லூஷியம் நகரில் நடைபெற்றது. இது விம்பம் அமைப்பின் மூன்றாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழாவாகும். இப்படவிழாவில் இங்கிலாந்து, ஒல்லாந்து, கனடா, டென்மார்க், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட பதினொரு குறும்படங்கள் திரையிடப்படுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தன.



படங்களும் அவை பெற்ற விருதுகளும் முறையே Best Film - India: MARAIPORUL - Mr Pon Sudha (India); Best Film - Exile: MANASU (Canada); Best Director: Mr P S Suthakaran (Manasu - Canada); Best Editor: Mr S V Jeyaraj (Eelaththup Pukkal - London); Best Cameraman: MR Ravi Atchuthan ( MANASU - Canada); Best Script: Mr S Shanmugam (Thodarum Naadagam - Denmark), Best Actress: Ms Yasotha Kandiah (Kazuvai - Canada); Best Actor: Mr P S Suthakaran (Manasu - Canada)

இடம்:பார்வையாளர், வலம்:விருது பெறும் சுதாகரன்

BARKING SHOPFRONTS LTD
Tel: 020 8591 0504 or 020 8594 0723 (6Lines)
Fax: 020 8594 3060
www.barkingshopfronts.co.uk
POWDER COATED & ALUMINIUM SHOPFRONTS
ELECTRIC & MANUAL SHUTTERS
SIGNS - SECURITY GRILLES
GLAZING REPAIRS / MAINTENANCE AGREEMENT
THE COMPLETE SHOPFITTING SERVICE AT COMPETITIVE PRICES
UNIT 1, BARKING INDUSTRIAL PARK, ALFREDS WAY, BARKING, ESSEX 1G11 0TJ (MAIN ENTRENCE FROM RIPPLE ROAD)

J.M. Shopfitters
warm | welcoming | creative
The right job, at the right place, at the right time...
Call us for an estimate& advice in any area
Unit 1c, Barking Industrial Park, Alfreds Way, Barking, Essex IG11 0TJ
t. 020 8591 5842
f. 020 8591 5116
www.jmshopfitters.co.uk

The Today's Group hothi Hothi Cash & Carry Ltd.
35-37 Park Royal Road, Park Royal, London NW10 7LQ T.020 8965 2428 F.020 8553 1097
Suppliers of wines, beers and spirits
Wide range of product available at very competitive prices.

FUNTASIA
Fancy Dress & Party Shop
Specialist in Party Goods
Established since 1984
229 Kenton Road, Kenton, Harrow HA3 0HD
Tel/Fax: 020 8907 1333
Email: funtasia@london.com
Web: www.funtasiaworld.com

scenic Tours and Travel
Special Fares to
Bangalore, Bombay, Chennai, Calcutta, Colombo, Delhi, Hyderabad, Trivandrum
YOUR ONE STOP SHOP FOR LOW COST FLIGHTS AND HOTELS
542 Kingsbury High Road, London NW9 9HH
Tel: 020 8204 9222
E-mail: info@scenictoursandtravel.com
www.scenictoursandtravel.com

OM Jewellers
Specialists in 22 Karat Gold & Diamond Jewellersy
25 King Street Southall Middlesex UB2 4DG
020 8574 6388 www.omjewellers.net

TV
+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Specian Rates: COCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
*Two regular shipments to Colombo per month
*Good arrive within 17 days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787 Fax: 020 8888 5445
E-mail: tricko@btclick.com
Unit 4, Bitten Place, Coburg Road, Wood Green London N22 6TP

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

Continues From Page 1

இது தொடர்பாக இந்தியா ஆவன செய்யும் என்றும் இது தொடர்பாக இலங்கை அரசிடம் இந்தியா எடுத்துக்கூறியுள்ளது என்றும் பிரதமர் கூறியதாக சம்பந்தம் தெரிவித்தார்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரித்தால் அது தமிழர்களுக்கு பெரும் தீமையை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இந்த எம்.பி.க்கள் கடந்த 2 மாதங்களுக்கு முன்பே பிரதமரை சந்திப்பதாக இருந்தது.ம.தி.மு.க.தலைவர் வைகோ இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார். ஆனால் அந்த சந்திப்பு ஏதோ காரணத்தால் நடைபெறாமல் போய்விட்டது இப்போது அந்த சந்திப்பு நடந்துள்ளது.


காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை சந்திக்க விரும்பினாலும் அவர் வேறு அலுவல்களில் இருப்பதால் அவரை சந்திக்க முடியவில்லை என்றும் சம்பந்தம் கூறினார்.

# சண்றைஸ் வானொலி சூரியோதயம் ஆகிறது

சண்றைஸ் தமிழ் ஒலிபரப்பு ஐரோப்பிய தமிழர்களின் வரலாற்றில் பதியப்பட வேண்டிய ஒரு முக்கிய ஊடகம். தற்போது 18 வருடங்களாக தொடர்ச்சியாக ஒலிபரப்பப்படுகின்றது.

சண்றைஸ் ரேடியோ தற்போது சூரிய உதயம் என்ற பெயரில் ஒலிபரப்பப்படுகின்றது. 16 வருட காலமாக டாக்டர் நித்தியானந்தனால் நடத்தப்பட்ட சண்றைஸ் ரேடியோ 2 வருடத்திற்கு முன்பாக சண்றைஸ் ரேடியோவின் ஆரம்பகால ஒலிபரப்பாளரான நடாமோகனால் பொறுப்பேற்கப்பட்டது.

தற்போது மீடியம் வேவ் 1035 அலைவரிசையில் வாரத்திற்கு 4 தடவைகள் ஒலிபரப்பப்படுகின்றது. ஆரம்பத்தில் சண்றைஸ் மீடியம் வேவ் 1458ல் ஒலிபரப்பப்பட்டது. இப்போது சண்றைஸ் இன் சகோதர ஒலிபரப்பாக கிஸ்மத் என்ற அலைவரிசையில் ஒலிபரப்பப்படுகின்றது.



சினிமாவை மையப்படுத்தி நிகழ்ச்சிகளை அமைக்காமல் புலம் பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியல் சம்பந்தமான விடயங்களை முதன்மைப் படுத்துவதிலேயே தமது முழு கவனத்தையும் செலுத்துவதாக சூரியோதயம் ஒலிபரப்பின் தலைவர் நடாமோகன் உதயனுக்குத் தெரிவித்தார். சண்றைஸ் வானொலியின் பழைய ஒலி பரப்பாளர்களான சிறிரங்கன், ஜனா ஆகியோர் இன்னமும் தொடர்ந்து பணிபுரிவது இங்கு குறிப்பிடத்தக்கது. (படம்: வானொலிக் குரல் நடா மோகன்)

# அகஸ்தியர் ஒரு அறிமுகம்: சில குறிப்புக்கள்

## வீரகேசரி ஞாயிறு இதழ் ஆசிரியர் வீ.தேவராஜ் B.A. (S.L) M.A(In)

### டிசம்பர் 2006 அகஸ்தியரின் 11வது ஆண்டு நினைவாக இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

ஈழத்து இலக்கிய உலகில் அகஸ்தியர் ஒரு சகாப்பதம். அத்தகைய ஒரு சகாப்தத்தை உருவாக்க கூடிய இன்னொரு இலக்கிய சிருஷ்டி கர்த்தாவை இன்று எம்மால் பார்க்க முடியாதிருக்கின்றது.

அந்தளவுக்கு அவர் உயிருடன் இருக்கும் பொழுதைவிட இன்று இமயமாய் உயர்ந்து நிற்கின்றார்.

மறைந்த அகஸ்தியர் புடம் போட்ட ஒரு மார்க்சிய வாதி. தான் கொண்ட கொள்கையில் இருந்து இறுதிவரை விலகாது வாழ்ந்தவர். அந்த வகையில் அவர் தனது தேவைகளுக்காக தான் கொண்டிருந்த கொள்கையை விற்று விடவில்லை. அதே வேளையில் பிறரின் விமர்சனங்களுக்காகவும் கண்டனங்களுக்காகவும் தனது கொள்கைகளைத் தூக்கி எறிந்துவிடவும் இல்லை. அந்தளவுக்கு அவர் தான் வளர்த்துக்கொண்ட மார்க்சிய சித்தாந்தத்தை இறுதிவரை கடைப் பிடிப்பவராக இருந்தார்.

மறைந்த அகஸ்தியரை நாம் ஒரு இலக்கிய வாதியாக, அதாவது சிறுகதைகளின் சிருஷ்டி கர்த்தாவாக, நாவலாசிரியராக, குறுநாவல்களுக்குச் சொந்தக்காரராக பார்க்கின்றோம்.

ஆனால் அகஸ்தியர் இந்த இலக்கிய வரம்பிற்குள் மாத்திரம் கட்டுண்டு கிடக்கவில்லை.

அவர் ஒரு நாடக ஆசிரியர், கட்டுரையாளர், இசை ஞானம் கொண்ட நல்ல கலைஞர், மிருதங்க வாத்தியத்தை வாசிக்கத் தெரிந்தவர். நாட்டுக் கூத்தின் சகல இராகங்களையும் பாடத் தெரிந்தவர்.

இவை மாத்திரமல்ல 'உணர்வூற்றுருவக சித்திரம்' என்ற புதிய இலக்கிய வடிவத்தை உருவாக்கிய சிற்பி.

இவ்வாறு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர்தான் அகஸ்தியர்.

கவிதையோடு இலக்கிய உலகில் பிரகாசித்த அகஸ்தியர் 360 க்கு மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். இவற்றுள 280 சிறுகதைகள் நூலுருப் பெறவில்லை.

'மேய்ப்பர்கள்', 'அகஸ்தியர் கதைகள்', 'எவளுக்கும் தாயாக' போன்ற சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

'மேய்பர்கள்' எனும் சிறுகதை மலையக மக்களைப் பற்றியதாகும். இது 1990 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் பரிசையும், இலங்கையில் அதே ஆண்டிற்கான சாகித்திய விருதினையும் பெற்றுக்கொண்டது.

இவைகளுடன் 40 குட்டிக் கதைகள், 10 குறு நாவல்கள், ஒன்பது நாவல்கள், நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள், இருபது வானொலி நாடகங்கள், நாட்டுக்கூத்து நாடகங்கள் என இவரது படைப்புக்கள் பரந்துள்ளன.

1959 இல் எழுதப்பட்ட 'எரிமலை' என்ற நாவல் தினகரனில் வெளிவரவிருந்து நிறுத்தப்பட்டது. பிறகு இது ஈழநாடு வார மலரில் வெளிவரத் தொடங்கி, இதை



வெளியிட்டமைக்காக ஆசிரியர் பதவி விலக்கப்பட்டார்.

இது நூலுருப் பெறுவது கூட தடைப்பட்டு இறுதியில் அதாவது 30 ஆண்டுகளுக்குப் பின் 1992 இல் மலைநாட்டு எழத்தாளர் மன்றத்தின் முன்னைநாள் தலைவரும் செய்தி ஆசிரியருமான திரு.ரா.மு.நாகலிங்கத்தின் பெரும் முயற்சியினால் 'எரி நெருப்பில் இடை பாதை இல்லை' என்னும் பெயருடன் வெளிவந்தது.

இலங்கையில் சகல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இந்தியாவில் 'தாமரை', 'எழுத்து', 'கலைமகள்', 'தீபம்', 'ஜீவா', 'கண்ணதாசன்' ஆகிய சஞ்சிகைளில் அகஸ்தியரின் ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. இவரது எழுத்துக்கள் சிங்களம், மலையாளம், ருஷ்ய ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

அகஸ்தியர் பற்றி இன்று நிறையவே பேசுகின்றோம் எழுதுகின்றோம்.

ஆனால் அன்று அவரது எழுத்துக்கள் கனம் பண்ணப்பட்டனவா? இல்லை.

"ஒன்றுமே இல்லாதவற்றைக் கூட வடம் பிடித்து இழுத்து வந்து வானுயர்த்திக் காட்டும் ஈழத்து இலக்கிய உலகம் சகல விதமான அடக்கு முறை விலங்குகளையும் உடைத்துக்கொண்டு மனிதன் மேலெழ வேண்டும் என்னும் தனது லட்சியக் கொள்கையிலிருந்து இம்மியளவும் விலகாமல் எழுதி எழுதியே இருந்த இவரை ஏனோதானேவென்று விட்டு விட்டமை கவலைக்குரியது" என்று தெளிவத்தை ஜோசப் அகஸ்தியர் பற்றிய ஒரு கட்டுரையில் கவலையோடு நினைவு கூருகின்றார்.

அது மட்டும் அல்ல விமர்சனம் என்ற பெயரில் பிய்த்து உதறப்பட்டார். அவ்வேளையில் எல்லாம் அகஸ்தியர் கூறிய வார்த்தைகள் "எனது எழுத்து எனக்கு சொந்தமில்லை. அது மக்களுக்கு சொந்தம்." இவ்விதம் கூறிய ஒருவர் கனம் பண்ணப்படாவிட்டால் கூடப் பரவாயில்லை. விமர்சனம் என்ற போர்வையில் 'அறுவை'யை ஈழத்து இலக்கிய உலகம் செய்யாதிருக்கலாம்.

இன்றும் மறுபிறப்பு பற்றி மதங்கள் பேசுகின்றன. ஆனால் அகஸ்தியர் அவர்கள் தாம் வாழ்ந்த காலத்திலேயே மறுபிறவி எடுத்துவிட்டார்.

1983 இனக்கலவரம் தான் அகஸ்தியர் அவர்கள் மறுபிறவி எடுக்கக் காரணமாகியது. இனக் கலவரம் அகஸ்தியரின் உடமைகள் மாத்திரம் அல்ல அவரது இலக்கிய ஆன்மாவையே சுட்டெரித்து சாம்பல் ஆக்கிவிட்டது. அனைத்தையும் இழந்த நிலையில் கனத்த மனதுடன் புலம் பெயர்ந்த அகஸ்தியர் அவர்கள் புலம் பெயர்வுக்குப் பிறகே புனர் ஜென்மம் எடுத்தார். தனது வாழ்நாளைக் கணக்கிட்டதினாலேயோ என்னவோ மிக வேகமாகச் செயற்பட்டார். கூடுதலான இலக்கியப் படைப்புக்களை பிரசவித்தார். புலம் பெயர்ந்து ஒன்பது வருடங்களில் சராசரியாக வருடத்திற்கு ஒன்று என்ற அளவில் ஒன்பது புத்தகங்கள் வெளியிட்டார்.

ஐரோப்பிய வருகையுடன் புலம் பெயர்ந்து சிதறிக்கிடந்த அனைத்து எழுத்தாளர்களையும் ஒரு கட்டுக் கோப்புக்குள் கொண்டு வர உதவினார். இலக்கிய இளந்தலைமுறையினரை வலிந்து அழைத்து தன்னுடன் இணைத்துக்கொண்டு அவர்களுக்கு உற்சாகம் ஊட்டி முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்களையும் மதித்து அணைத்து, அரவணைத்துப் போகும் பண்பு அகஸ்தியர் அவர்களுடன் ஊறிவிட்ட பண்பாகும்.

நோய் அவரை துரத்திய போதும் கைகள் நடுங்கிய நிலையில் தனது இறுதிக் காலம் வரை எழுத்துக்காகவே வாழ்ந்தவர் அகஸ்தியர் அவர்கள்.

இலக்கியத்தில் நாட்டம் கொள்வோர் அரிதாகி வரும் இவ்வேளையில், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கில் சிந்தித்து செயலாற்ற வேண்டியுள்ள ஒரு கால கட்டத்தில் ஐந்து சகாப்தங்களாக எழுத்துத் துறையில் பணயாற்றி வந்தார் அகஸ்தியர்.

'எழுத்தாளன் என்றுமே மரணிப்பதில்லை. அகஸ்தியர் என்னும் மானுடனும் மரணிக்கமுடியாது. தனது எழுத்துக்கள் மூலம் மனிதத்துவத்தை, மானிடத்தைத் தரிசித்து நேசித்த அகஸ்தியர் என்றென்றும் வாழ்வார்.'

மனிதனின் மரபணுவைக் கொண்டு இன்னொரு மனிதனைப் படைக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். இத்தகைய விஞ்ஞான உலகில் வாழும் நாம் எழுத்துலகில் அகஸ்தியர் மானுடனாக பிறக்க மறுபிறவி எடுப்போம். இல்லையேல் அத்தகைய ஒரு பிறவியை உருவாக்கலாம். அமைத்துக் கொடுப்போம். இதுதான் மனிதத்துவத்தை நேசித்த அகஸ்தியருக்கு நாம் செய்யும் கைமாறாக இருக்கும்.

1970 களில் அகஸ்தியரால் எழுதப்பட்ட சிறுகதை உருவச் சித்திரமான 'லெனின் பாதச்சுவடுகள்' படைப்பை நூலுருவில் கொண்டு வந்துள்ளனர் அகஸ்தியர் குடும்பத்தினர். இந்நூல் லெனின் வாழ்வில் நடந்த சமபவங்களை மிக அழகாக கதைகளாகத் தந்துள்ளார் அகஸ்தியர் அவர்கள். லெனினைப் பற்றி இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள ஒரு சிறந்த படைப்பாக இந்நூல் திகழ்கின்றது.

அகஸ்தியரின் நூற்றுக்கு மேற்பட்ட படைப்புகள் கையெழுத்து பிரதிகளாக தேங்கிக் கிடக்கின்றன. அவற்றையும் நூருருவில் கொண்டு வர அவரை நேசிக்கும் அனைவரும் முன் வர வேண்டும்.

அகஸ்தியரின் முற்போக்குச் சிந்தனைகள், கலை இலக்கியங்கள் மறைந்து விடாது என்றும் அவர் நாமம் நீடிக்க அவரின் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் அகஸ்தியர் குடும்பத்தினர் ஈழத்து இலக்கிய உலகில் பாராட்டத் தக்கவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள்.

# பிஜியின் ஆட்சிக் கவிழ்ப்பும் அதன் பின்னணியும்



இராணுவத் தளபதி பிராங்க் பயினிமராமா


அவுஸ்திரேலியாவுக்கு கிழக்கே பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள இரு அழகிய தீவுகளே பிஜிதீவு. இங்குள்ள பூர்வீக மக்களுக்கும், இந்திய வம்சாவளி மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் அந்நாட்டை இராணுவச் சதிப்புரட்சிகளின் ஒரு களமாக ஆக்கியுள்ளது. டிசம்பர் ஆரம்பத்தில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பில் இராணுவத் தளபதி பிராங்க் பயினிமராமா (Frank Bainimarama) அரசைக் கைப்பற்றியுள்ளார். இதன் விளைவாக் இந்நாட்டின் இரு இனங்களுக்கிடையிலான நெருக்கடிநிலை அதிகரித்துள்ளது. கடந்த 20 வருடகாலத்தில் இடம்பெற்றுள்ள நான்காவது இராணுவ சதிப்புரட்சி இதுவாகும்.

பிஜிவாழ் பூர்வீகக்குடியினர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமிருந்து தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து இங்கு வந்து குடியேறிய பொலினேசியர்களும் மெலனேசியர்களுமாவர். பிஜியன் இந்தியர்ககள் 19ம் நூற்றாண்டில் பிரித்தானிய காலனித்துவர்களால் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களும் அதன் பின் தன்னிச்சையாக வந்து அங்கு குடியேறியேறியோரும் ஆவர். 1970ம் ஆண்டு பிஜி பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றபோதும், பூர்வீக்ககுடியல்லாதாருக்கு நிலம் விற்க முடியாதென்ற சட்டம் (1876) காரணமாக இந்தியக்குடிகள் அரைப்பங்கினராக இருந்தபோதிலும் 83% நிலம் பூர்வீகக்குடிகளின் வசம் உள்ளது. அத்துடன் 1990ல் கொண்டுவரப்பட்ட 2வது அரசியல் யாப்பு இந்தியர்களை மேலும் நசுக்கும் வகையில் பூர்வீகக் குடிகளுக்கு மட்டுமே பிரதமர் பதவியிலிருக்கும் சந்தர்ப்பம் வழங்குவதுடன் அவர்களுக்கு அதிக பிரதிநிதிதுவமும் வழங்கியது.

1987ல் இராணுவத்தளபதி ரபூக்கா (Sitiveni Rabuka) இந்தியர் செல்வாக்குள்ள கூட்டுக்கட்சி ஆட்சிக்கு வருவதை தடுக்குமுகமாக சதிப்புரட்சியில் ஈடுபட்டார். ஆயிரக்கணக்கான பிஜி இந்தியர்கள் இவ்வாட்சியாளர்களின் கையில் அல்லலுற்றார்கள். எனினும் 1988ல் ஏற்படுத்தப்பட்ட புதிய அரசியல் யாப்பின் கீழ் ஒரு பல்லின அமைச்சரவை அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

1999ல் பிஜி தொழிற்கட்சியை சேர்ந்த மகேந்திரா ஷௌத்ரி முதலாவது இந்தியர் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார். 2000ல் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சியில் அவரது ஆட்சியும் கவிழ்க்கப்பட்டது. இத்தகைய இந்தியர்களுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு அண்டைய நாடுகளான அவுஸ்திரேலியாவும், நியூஸிலாந்தும் எண்ணெய் ஊற்றுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சதிப்புரட்சி பின் முறியடிக்கப்பட்டு 2001 தேர்தலில் Fijian United Party 31ஆசனங்களுடன் (மொத்தம் 17 ஆசனங்கள்) ஆட்சியமைத்தது. Qarase தலைமையிலான அமைச்சரவை முற்றிலும் பூர்வீக பிஜியர்களையே கொண்டிருந்தது. அத்துடன் பிரதமர் Qarase 2000 ஆண்டு சதிப்புரட்சியில் பங்குபற்றி சிறையிலிருந்து வரும் ரபூக்கா தரப்பினருக்கு மன்னிப்பு வழங்கும் சட்டமொன்றை கொண்டுவர முற்பட்டதால் ஆத்திரமடைந்த எதிர்க்கட்சியினரும் இராணுவத்தினரும் தற்போதைய இராணுவ சதிப்புரட்சிக்கு வழிகோலினர்.




Continues from Page 6

பட்டுப் போகாத ஒன்று

இலங்கையிலே பல பெரியவர்கள் இலங்கையை அமைதி சூழ் நாடாக ஆக்க வேண்டுமென்று பாடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய சந்திரகாசன் தந்தை செல்வாவும், ஜி.ஜி.பொன்னம்பலம், அமி ர்தலிங்கம் போன்றவர்களும் எத்தகைய முயற்சிகளிலே ஈடுபட்டார்கள் என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். இலங்கையிலே ஒரு சமஷ்டி அரசு அமைய வேண்டும் என்பதற்காக முதல் குரல் கொடுத்தவர், சந்திரகாசன் தந்தை செல்வா தான் என்பதையும், அவர் சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்த நிகழ்ச்சியையும் எண்ணிப்பார்க்கின்றேன்.

இலங்கையையே மையமாக வைத்து "புதையல்,பீபீ "பாயும் புலி பண்டார வன்னியன்பீபீ போன்ற கதைகளைக் கூட எழுதியிருக்கின்றேன். உங்களில் ஒரு சிலர் படித்திருக்கக் கூடும். இப்படி இலங்கையோடு இலக்கிய ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் எனக்குள்ள தொடர்பு என்றென்றும் பட்டுப் போகாத ஒன்று, பசுமையான ஒன்று.

விரைவில் விடியல்

நான் உங்களுக்காக ஆற்றிய பணிகளை எல்லாம் சந்திரகாசன் எடுத்துக் கூறி, அதற்கு நன்றி கூறி மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார். நன்றியை எதிர்பார்த்து நடைபெற்ற காரியம் அல்ல அவைகள். இயல்பாகவே எங்களுடைய ரத்த ஓட்டத்திலே உள்ள உணர்வு தான் வெளிப்பட்டிருக்கின்றது என்பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி, என்றென்றும் உங்களுக்காக நான் என்னுடைய கடமையை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன் என்பதையும் தெரிவித்து விரைவில் விடியல் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு இங்கே தமிழகத்திற்கு வந்திருந்து படித்து ஓரளவு பயிற்சியும் பெற்றிருக்கின்ற உங்களை வழியனுப்பி வைக்கின்றேன். இப்போது தற்காலிகமாகத் தான் வழியனுப்பி வைக்க முடியும். விரைவில் உங்களையெல்லாம் மகிழ்ச்சிகரமாக தமி ழகத்திலிருந்தே வழி அனுப்பி வைக்கின்ற அந்த நாள் வரட்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது மத்திய மந்திரி எஸ்.ரகுபதி, அமைப்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், அரு.கோபாலன் ஆகியோர் உடன் இருந்தனர்

# மத்தியகிழக்கு விவகாரங்களில் ஈரானினதும் சிரியாவினதும் உதவியை நாடும் அமெரிக்கா, பிரித்தானியா



Ehud Olmert, Mahmoud Ahamadinejad, George Bush, Tony Blair

உலகத்தின் நாசகார அழிவுச்சக்திகளின் இணைவுக்கோடு என்று மேற்குலகால் வர்ணிக்கப்பட்டது மத்தியகிழக்கு நாடுகளான ஈரானும் ஈராக்கும். இன்று தம்மால் அப்பிராந்தியத்தில பூதகரமாக வளர்க்கப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அவர்களின் உதவயை நாடும் நிலைக்கு இம்மேற்குலக சக்திகள் தள்ளப்பட்டுள்ளன. அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களில் யோர்ஜ் புஸ்ஸின் குடியரசுக்கட்சி பலத்த தோல்விகளைத் தழுவியதைத் தொடர்ந்து அமெரிக்காவின் ஈராக் தொடர்பான கொள்கையில் மாற்றங்கள் கொண்டுவரப்படுவது தவிர்க்க முடியாததாயிற்று. எதிர்காலத்தில் ஈராக் சம்பந்தப்பட்ட் விவகாரங்களில் ஈரானுடனும், சிரியாவுடனும் பேசுவதற்கு உத்தேசித்திருப்பதாக வெள்ளைமாளிகை கருத்து வெளியிட்டுள்ளது.

பலகட்சிக் கூட்டமைப்பான ஈராக்கிய ஆய்வுக்குழு (Iraq study group) சமர்ப்பித்துள்ள அறிக்கையிலும் தெகிரானுடனும் டமக்கஸுடனும் தொடர்புகளை புதுப்பிக்குமாறு கோரியுள்ளது. மேலும் இராணுவ முன்னரங்க நிலைகளில் உள்ள துருப்புக்களை 2008க்கு முன்னர் அமெரிக்காவிற்கு திருப்பி அழைக்குமாறும் அவ்வறிக்கை சிபாரிசு செய்துள்ளது. அமெரிக்காவின் ஈராக் தொடர்பான கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இவ்வறிக்கை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் யோர்ஜ் புஷ்சை வெள்ளைமாளிகையில் சந்தித்த இஸ்ரேலிய பிரதமர் எகட் ஒல்மேட் (Ehud Olmert) ஈரானின் அணுசத்தி திட்டம் நிறுத்தப்படவேண்டுமென்ற ஐ. நா.வின் கோரிக்கையை அந்நாடு ஏற்கமறுத்தது குறித்த தமது அதிகரித்த கவலையை தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி விட்ட அறிக்கையில் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதற்கு முன்னதாக ஈரான் தனது அணுசக்தி சம்பந்தமான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்றும், சிரியா லெபனான் விவகாரத்தில் விலகிநிற்க வேண்டுமென்றும் நிபந்தனை விடுத்தார். பிரித்தானிய பிரதடர் ரோனி பிளயரும் இதேவிதமான கருத்தை வெளியிட்டுள்ளார்

இதன் எதிரொலியாக பிரித்தானியாவின் சிரியத்தூதுவர் தமது நாடு அமெரிக்கா, பிரித்தானியாவுடன் தொடர்புகளைப் பேண விரும்புவதாக பிபிசிக்கு தெரிவித்துள்ளார். ஈரானிய பிரதமர் மொகமட் அகமடின்யட் (Mahmoud Ahamadinejad) தனது அரச தொலைக்காட்சியில் நேரடியாக ஒலிபரப்பான செய்தியாளர் மாநாட்டில் வாஷிங்டன் தனது போக்கை மாற்றுமாயின் அதனுடன் ஈரான் பேசத் தயார் எனத் தெரிவித்துள்ளார். மத்தியகிழக்கில் அமெரிக்கா தலைமையிலான தலையீடுகள் ஆரம்பிக்கப்பட்ட போது மேற்குறித்த நாடுகள் எவையும் கலந்தாலோசிக்கப்பட வில்லை. இன்று, அங்கும், தத்தமது உள்நாடுகளிலும் மூக்குடைபட்ட நிலையில் இவ்அரபு நாடுகளின் ஆதரவு மத்தியகிழக்கு பிரச்சனைகளை கையாழுவதில் தேவைப்படும்போது அவற்றின் மீது விதிக்கப்படும் இந்நிபந்தனைகள் எவ்வளவுக்கு நடைமுறைக்குச் சாத்தியமானவை என்பது கேள்விக்குறியே.



பதவியைவிட்டு வெளியேற்றப்பட்ட பாதுகாப்புச் செயலர் ரம்ஸ்பீல்ட்

**உண்மை ! நடுநிலை ! மக்கள் நலன் !**

Charles Kirit & Co Solicitors
24 Hour Police Station Assistance
Burrows House 415-417 High St Stratford
London E15 4QZ DX: 92230Stratford (London)1
Tel: 020 8221 0827 Fax: 020 8221 0828
Pager: 07659 107698 (24 hours)

Chris Raja Solicitors
Commercial - Domestic Conveyance
Immigration
Matrimonial Divorce, Childrens Applications
Grosvenor House, Third Floor, 1 High Street, Edgware, Middlesex HA8 7TA
Tel: 020 8952 1990 - 020 8952 8606
Fax: 020 8952 9606 Mobile: 07703 544 408
e-mail: CRSolicitors@hotmail.com

LINGA & CO
LEGAL ADVISERS AND COMMISSIONERS FOR OATHS
T. 020 8544 9285 F. 020 8542 9530
→ உங்களுக்கு பிரித்தானியாவில் வசிக்கும் அல்லது வேலைபார்க்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதா?
→ திருப்பி அனுப்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?
→ நீங்கள் பிரித்தானியாவில் தொடர்ந்து சட்டப்படி வசிக்க விரும்புகிறீர்களா?
→ அப்படியாயின் பல வழிகள் உண்டு
உடன் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
12 ஆண்டுகால அனுபவமுள்ள முன்னணி குடிவரவுச் சட்ட நிறுவனத்திடம் இருந்து நிறுவனத்திடம் இருந்து உங்கள் குடிவரவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். இதில் நாம் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட பெரும் பாலான நுழைவு விண்ணப்பங்கள் - மேன் முறையீடுகள் உள்துறை அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன.
We specialise in
Asylum and Immigration matters, Human Rights Application, Appeals, Detentionand Bail, Entry clearance application and appeal, Immigration, Judicial Review, Work Permits, EEA Application (Sponsor relative), Student visa, Highly Skilled Migration Program, Naturalisation Application,
46 High Street, Collieswood, London SW19, Emergency Line: 077 7164 6441

MARKANDAN & UDDIN SOLICITORS
SOLICITORS AND ADMINISTRATORS FOR OATHS
M. MARKANDAN LLB A. UDDIN LLB (Hons) MA.LLM PhD-RFL

• Last Will
• Power of Attorney
• Sponsorship Declarations
Contact:
M MARKANDAN 07956 386 576
UDDIN 07957 455 670
KURUP 07748 764 079
GILBERT 07946 318 470
MAHENDRAN 07881 650 472
MATHU 07830 285 634
JASOKUMAR 07961 996 482
SONG 07952 769 656
SHIYAM 07793 134 335
Markandan & Uddin Solicitors
Tamil House, 720 Romford Road, London, E12 6BT
Tel: 020 8514 8300 / 07830285 634
Fax: 020 8514 8381

# இலங்கை தமிழர் விருப்பப்படி தனித்தமிழ் ஈழம் தான் இலங்கை பிரச்சினையில் தீர்வாக அமையும்

## கவிஞர் கனிமொழி

இலங்கை தமிழர் விருப்பப்படி தனித்தமிழ் ஈழம் தான் அவர்களின் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்று கவிஞர் கனிமொழி கூறினார்.

ஐகோர்ட்டில் தமிழில் வாதாடுவது குறித்த கருத்தரங்கம் மதுரை ஐகோர்ட்டில் நேற்று நடந்தது. அதில் கலந்து கொள்ள வந்திருந்த முதல்–அமைச்சர் கருணாநிதியின் மகளும், கவிஞருமான கனிமொழி நிருபர்களிடம் கூறியதாவது:–

மாநில அளவிலான பேரணி

கேள்வி:– ஐகோர்ட்டில் தமிழ் மொழியை பயன்பாட்டுக்கு கொண்டுவருவது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

பதில் :– தமிழக ஐகோர்ட்டில் தமிழில் வாதாடவும், தமிழில் தீர்ப்புகள் உள்பட ஆவணங்கள் வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவது வரவேற்கத்தக்கது. இதனால் கோர்ட்டுகளில் என்ன நடக்கிறது என்பதை சாதாரண மக்களும் அறிந்து கொள்ள முடியும். பல மாநிலங்களில் இது போன்ற முறை நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் நாம் சற்று காலதாமதமாகத்தான் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

கேள்வி :– பாராளுமன்றத்தில் பெண்கள் இடஒதுக்கீடு பிரச்சினையில் ஏதாவது செய்ய நினைக்கிறீர்களா?

பதில்:– பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு திட்டத்தை அமல்படுத்த அனைத்து மாநிலங்களும் உதவி செய்ய வேண்டும். இது பற்றி தொடர்ந்து பேசி வருவதைவிட நடைமுறைப்படுத்திவிட்டு பிறகு மாற்றங்கள் செய்யலாம். இந்த திட்டத்தை அமல்படுத்த கோரி பெண்கள் ஒருங்கிணைப்பு அமைப்பு மூலம் அடுத்தமாதம் (ஜனவரி) 19–ந் தேதி சென்னையில் மாநில அளவிலான பேரணி ஒன்றை நடத்த இருக்கிறோம்.

கேள்வி:– விரைவில் உங்களுக்கு எம்.பி.பதவி தி.மு.க.சார்பில் வழங்கப்படுவதாக கூறப்படுகிறதே?

பதில்:– தீவிர அரசியலில் ஈடுபடும் எண்ணம் எனக்கு தற்போது இல்லை. அப்படி வந்தால் அவசியம் தெரிவிப்பேன். தி.மு.க.சார்பில் மேல்சபை எம்.பி.பதவியை எனக்கு தருவதாக தகவல் எதுவும் இதுவரை இல்லை.

கேள்வி:– தற்போது தமிழக அரசின் செயல்பாடு எப்படி உள்ளது?

பதில்:– என் பார்வையில் தமிழக அரசின் செயல்பாடு நன்றாக உள்ளது. நான் எந்த கட்சியையும் சார்ந்து தற்போது பிரச்சினைகளில் குரல் கொடுக்கவில்லை.

தூக்கு தண்டனை

கேள்வி:– தூக்கு தண்டனைக்கு சிலர் ஆதரவும், சிலர் எதிர்ப்பும் தெரிவிக்கிறார்கள். இது குறித்து உங்கள் கருத்து?

பதில்:– தூக்கு தண்டனைக்கு எதிரான குரல் என்னுடையது. மரண தண்டனைகள் வழங்கப்படுவதால் மட்டும் குற்றங்கள் குறையும் என்று கூற முடியாது. இத்தனை ஆண்டுகளாக மரண தண்டனை வழங்கப்பட்ட நிலையிலும் குற்றங்கள் குறையவில்லை. தவறுகளை மட்டும் வைத்து கணக்கிடாமல் அது ஏன் நடந்தது என்பதையும் ஆராய வேண்டும்.

கேள்வி:– பாராளுமன்றம் மீது தாக்குதல் நடத்திய முகமது அப்சலுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது குறித்து?

பதில்:– முகமது அப்சலுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதையும் நான் வரவேற்கவில்லை. அந்த விசாரணையில் பல குறைபாடுகள் உள்ளதாக சுப்ரீம்கோர்ட்டே கூறி உள்ளது. இதனை பாரதீய ஜனதா கட்சியினர் பிரச்சினை ஆக்குகிறார்கள்.

கேள்வி:– தமிழ் மொழியின் நிலை மாநிலத்தில் எப்படி உள்ளது?

பதில்:– மற்ற மொழிகளும் ஆங்கிலமும் தமிழின் இடத்தை ஆக்கிரமித்து உள்ளது. கல்வித்துறை உள்பட பலவற்றில் தமிழ் வேண்டாம் என்று நினைக்கும் பலர் உள்ளனர். இதனை எதிர்த்து போராட வேண்டும். தமிழக அரசு கல்லூரிகளில் படித்துவிட்டு வரும் பலருக்கு தமிழ் தெரியவில்லை. பல உயர் பதவிகளில் தமிழ் தெரியாதவர்கள் இருக்கிறார்கள். தமிழ் கட்டாயம் இல்லாத நிலை உள்ளது. அதனை மாற்ற வேண்டும்.

தனித்தமிழ் ஈழம்

கேள்வி:– தமிழ் ஆராய்ச்சி மையம் மதுரையில் அமைக்கப்படுமா?

பதில்:– மதுரையில் தமிழ்சங்கம் அமைக்க அரசு கொடுத்த நிலம் உள்ளது. தமிழ் செம்மொழி ஆன நிலையில் அந்த இடத்தில் தமிழ் ஆராய்ச்சி மையம் அமைக்க முயற்சி செய்யலாம். முன்பு இருந்ததை விட தமிழ் நூல்கள் அதிகம் வெளியிடப்படுகின்றன. பண்பாட்டு பிரச்சினைகளை அரசின் கட்டுப்பாட்டில் விடமுடியாது. பொதுமக்கள் தான் அதில் ஈடுபாடு காட்ட வேண்டும். அதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கேள்வி:– இலங்கை தமிழர் பிரச்சினைக்கு எதனை தீர்வாக நினைக்கிறீர்கள்?

பதில்:– இலங்கை தமிழர் பிரச்சினைக்கு யாரும் உடனடியாக தீர்வு சொல்ல முடியாது. அங்கே இருக்கும் மக்கள் இந்த பிரச்சினையில் தனித்தமிழ் ஈழம் தான் தீர்வு என்று சொன்னால் அது தான் முடிவாக இருக்க வேண்டும். அவர்கள் அதைத்தான் விரும்புகிறார்கள் என்று நினைக்கிறேன்.


கேள்வி:– இந்திய அரசு இதில் என்ன செய்ய வேண்டும்?

பதில்:– ஒரு நாட்டின் மக்கள் வேறு நாட்டில் வாழும்போது பிரச்சினைகள் ஏற்பட்டால் அவர்களின் நாடு மற்றும் அங்குள்ள மக்கள் பிரச்சினையில் இருப்பவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கிறார்கள். அது போல இலங்கையில் உள்ள தமிழர்களின் பிரச்சினையில் உள்ள நியாயங்களை எடுத்துச்சொல்ல வேண்டிய கடமை இந்தியாவுக்கு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது ரவிக்குமார் எம்.எல்.ஏ., அகில இந்திய வக்கீல்கள் சங்க துணை தலைவர் பிரபாகரன், தமிழ்நாடு வக்கீல்கள் தமிழ் சங்க தலைவர் சின்னராஜா, செயலாளர் மனோகரன், மாநில துணை அமைப்பாளர் வெங்கடேசன், வக்கீல் முத்துக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

# பால்வினைத் தொழிலாளர்களுக்கான வங்கிச்சேவை


பால்வினைத் தொழிலாளர்களுக்கான வங்கிச்சேவை

இந்தியாவின் முன்னாள் பால்வினைத் தொழிலாளி ஒருவரால் சிறிய அளவில் உருவாக்கப்பட்ட வங்கியொன்று வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு 12 கிளைகளை இப்பொது பரப்பியுள்ளது. உஷா பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் என்ற வங்கி நிறுவனம் பால்வினைத் தொழிலாளர்களிடையே செல்லமாக உஷா என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. ரேக்கா சட்டர்ஜி என்ற முன்னாள் பால்வினைத் தொழிலாளி ஒருவரால் 12 அண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட இந்நிறுவனமே இன்று பாரிய வளர்ச்சி கண்டு உலகின் பார்வைக்கு உள்ளாகி உள்ளது. நிர்வாகக் கெடுபிடிகள் காரணமாக சாதாரண வங்கிகளில் தமது சேமிப்பை வைப்பிலிருவதில் பால்வினைத்தொழிலாளர்கள் சிக்கல் களை எதிர்நோக்கி இருந்தனர். இந்நிலையிலேயே கூட்டுறவு முறையில் கொல்கத்தாவில் அவர்களுக்காக பிரத்தியேகமாக 13 அங்கத்தினர்களுடன் இவ்வங்கி யை ரேகா தோற்றுவித்தார். இன்று 20,000 அங்கத்தினரை உள்வாங்கிக் கொள்ளுமளவிற்கு கணினி வலையமைப்பகளின் பயன்பாட்டுடன் நவீன பெருந்தெரு வங்கிகளுடன் போட்டிபோட்டு உஷா வங்கி வளர்ச்சிகண்டுள்ளது.

பால்வினைத்தொழிலாளர்களுக்கான வங்கி என்ற காரணத்தால், பொதுவான வங்கிச் சேவை முறைகளிலிருந்து உஷா வங்கி வேறுபடுகின்றது. எழுத்தறிவற்றவர்களாகப் பல பால்வினைத் தொழிலாளர்கள் இந்தியாவில் வாழ்வதால், கையெழுத்து வைக்காமல் பெருவிரல் அடையாளத்தை (கைநாட்டு) மட்டும் இட்டு வங்கி அலுவல்களை அங்கத்தவர்கள் மேற்கொள்ளலாம்.

வங்கி வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் தமது பணத்தைச் சேமிக்கவோ எதிர்காலத்தைத் திட்டமிடவோ வாய்ப்பின்றி அன்றாடம் கள்வர்களிடமும், பால்வினைத் தொழில் முகவர்களிடமும் தமது பணத்தை இழந்து வந்த இத்தொழிலாளர்களின் இருண்ட எதிர்காலத்திற்கு இவ்வங்கியின் உருவாக்கம் பன்னிரண்டாண்டுகளுக்கு முன்னர் ஒரு கலங்கரை விளக்காக வெளிச்சம் பாய்ச்சியது. இன்று தமது பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியைத் திட்டமிடத் தமது வருவாயைச் சேமித்து வைக்க எதிர்காலத்தில் தமக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இச்சேமிப்பத் திட்டம் உதவியிருக்கின்றது. கடன் திட்டத்தின் கீழ் சிகப்பு விழக்குப் பகுதியிலேயே தமது வாழ்வை முடித்துக்கொள்ளளாது, அதற்கப்பால் அவர்களுக்கென்று வீடுகளைக் கட்டிக்கொள்ளவும், பிற தொழிற் கல்விகளை மேற்கொள்ளவும் கடனுதவித்திட்டம் இவ்வங்கியினூடாக வழங்கப்படுகின்றது.

தனது 25ஆவது வயதில் பால்வினைத் தொழிலாளியான ரேகா சட்டர்ஜி எட்டு ஆண்டுகள் அத்தொழிலில் இயங்கியபின்னர் இவ்வங்கியைத் தோற்றுவித்தார். பன்னிரண்டாண்ட காலம் வளர்த்துவிட்டபின்னர் இப்பாரிய வங்கிச் சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார்.

AMEN SOLICITORS
SOLICITOR AND COMMISSIONERS FOR OATHS
(formerly known as Nathan & Linga)

We offer a specialised and friendly service in the following areas of law
* Immigration and Nationality
* Human Rights
* Judicial Review
* Civil Litigation
* Criminal Litigation
* Injunction
* Traffic Offences
* Conveyancing (Residential & Commercial)
* Family Law
* Employment Law
* Mental Health
* Liquor licensing
* Landlord and Tanent

Also, we offer our quality legal service inthe following languages
* Creole * English * Italian * Malay * Nepalese * Sinhalese * Tamil
* Chinese * French * Hindi * Mandarin * Funjabi * Spanish * Urdu

4 Amen Corner, Tooting,
London SW17 9JE
General Line: 0208 682 7720
Emergency Line: 0777 164 6441
Fax: 0208 767 1412

MARKANDAN & CO SOLICITORS
அரசியல் தஞ்ச விடயங்கள், பிரித்தானிய பிரஜாவுரிமை
விவாக விண்ணப்பங்கள், வீதிப் போக்குவரத்து வழக்குகள்,
Bankruptcy Problems,
Cafe அனமதிகள் யாவும் ஒரே கூரையின் கீழ்.
Last will & Probate, House flat sale, Re-mortgages,
Highly skilled migration, Sponsorship,
Power of Attorney, Work permet application, Civil Litigation.
020 8514 8188
845 Romford Rd, Manor Park, London E12

NP solicitors
- Immigration matters
- Work permits, HSMP, SBS
- All entry clearance issues
- Appeals, ECO to High Court etc
- All Home Office applications
- 10 Asian languages spoken
Commissioners For Oaths
171 Hanworth Road, Hounslow,
Middlesex TW3 3TT - UK
Tel: 020 8577 7799 Fax: 020 8577 9788
e-mail: npsolicitors@yahoo.co.uk
www.npsolicitors.com
Saturdays by Appointment
THIS FIRM IS REGULATED BY THE LAW SOCIETY

RASIAH & CO.
Solicitors
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
020 8543 4040
020 8543 2400
180A Merton High Street, London SW19 1AY

GARCHA&CO
Chartered Certified Accountants
For your accounting and Taxation needs, CALL:
Heasleigh House 79a South Road,
Southall, Middlesex UB1 1SQ
Tel: 020 8843 1816 020 8843 9010
Fax: 020 8813 8249

JAY VADHER&CO
SOLICITORS
AND NOTARY PUBLIC
Jay Vadher and Rajay Vadher
Partners
Asst. Solicitor - Ruby Moreea
Notary Public - Roger Hart
We specialise in commercial & residential property conveyancing, wills,probate and family law.
For asistance please contact us at
Victoria House, 185 Romford Road, Stratford, London E15 4JF
Tel: 020 8519 3000 DX 52106 Forest Gate Fax: 020 8519 3300
E-mail: j.vadher@jayvadher.co.uk E-mail:r.vadher@jayvadher.co.uk

JANI TAYLOR ASSOCIATES
- Expert Witness
- Forensic Accounting
- Litigation Support
- Tax Investigations
Office 6A, Popin Business Centre
Southway, Wembley, Middlesex HA9 0HF
T: 020 8795 3429 F: 020 8795 3318
rajni@janitaylor.co.uk

David Shine & Kharhanda Solicitors
Divorce, Litigation,
Wills Probate,
CONVEYANCING
MATRIMONIAL & FAMILY
Also Landlord & Tenant Cases
See us Now
020 8571 6001 / 2
Southall

MR K CHELVA-NAYAGAM LLB
SOLICITORS
(Former principal of Natham & Chelva)
Has now joined
as a solicitor with
Srinivasans Solicitors at
169 Tooting High Street
London SW17 0SY
Tel: 020 8767 1151 Fax: 020 87671388
Contact him for all your legal matters in particular Commercial& Residential Conveyances, Family Proceedings, Civil Litigation & Immigration. He always works for clients' interest & takes more x care in dealing with his clients' matters.

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

PINIDIYA
SOLICITORS LLP
Specialist in.......
- Immigration Law
- Work Permits
- Business Visa
- Appeals & Entry Visa
- Housing Law
- Family Law
- Landlord & Tenant
- Conveyancing
- Wills / Probate
- Legal Aid Available On Immigration
- Free Initial Consultation
pinidiyasolicitors@fsmail.net
Emergency: 079 61199557
Tel: 020 8571 3535 Fax: 020 8574 2525
83A, South Road, Southall, Middx UB1 1SQ

# லஞ்சம் கொடுத்ததாக வழக்கு: 40 வயதில் தலைமறைவானவர் 71 வயதில் கைது

லஞ்சம் கொடுத்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் 40 வயதில் தலைமறைவான புகையிலை வியாபாரி 71 வயதில் கைது செய்யப்பட்டார்.

புகையிலை வரி

இரும்பு உள்பட கம்பெனிகளில் தயாராகும் பொருட்கள், வாகனங்கள் உள்பட பல்வேறு பொருட்களுக்கு மத்திய அரசின் கலால் வரி விதிக்கப்படுவது வழக்கம். கலால் வரி சட்டங்கள் கடந்த 1988–ம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. அதற்கு முன்பு இருந்த சட்டப்படி புகையிலைக்கு குறிப்பிட்ட சதவீதத்தில் வரி விதிக்கப்பட்டது.

ஆனால் கொள்முதல் செய்த புகையிலை பயன்படாமல் போனால் அவற்றை அழிக்க அனுமதி அளிக்கப்பட்டது. அப்படி அழிக்கும் புகையிலைக்கு வரி செலுத்த தேவையில்லை. திண்டுக்கல் பகுதியில் அதிக அளவில் புகையிலை விளைவது வழக்கம். அவற்றை வியாபாரிகள் கொள்முதல் செய்து கம்பெனிகளுக்கு விற்பனை செய்வார்கள். அந்த வியாபாரிகள் திண்டுக்கல் கலால் வரி அலுவலகத்தில் வரியை செலுத்த வேண்டும்.

வரி ஏய்ப்பு

இந்த நிலையில் கலால் வரித்துறை அதிகாரிகளுக்கு வியாபாரிகள் லஞ்சம் கொடுத்து புகையிலை பயன்படாமல் போனதால் அழித்துவிட்டதாக எழுதி வாங்கிக்கொண்டு, பின்னர் அவற்றை விற்பனை செய்ததாக புகார் எழுந்தது. இதன் மூலம் பெருமளவில் வரி ஏய்ப்பு நடந்ததாக கூறப்பட்டது. இது குறித்து சி.பி.ஐ.போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது அரசை ஏமாற்றும் வகையில் வரி ஏய்ப்புக்காக லஞ்சம் வாங்கியதாக கலால் வரித்துறை கலெக்டர், கமிஷனர், சூப்பிரண்டு உள்பட 9 பேர் மீதும் அவர்களுக்கு பணம் கொடுத்ததாக வியாபாரிகள் 20 பேர் மீதும் கடந்த 16.12.75 அன்று வழக்கு பதிவு செய்தனர். இதில் மற்றவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் எஸ்.நயினார் முகமது (வயது 40) என்ற வியாபாரி தலைமறைவானார்.

71 வயதில் கைது

இந்த நிலையில் நயினார் முகமது மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டது. மீதமுள்ள 28 பேர் மீதான வழக்கின் விசாரணை மதுரை சி.பி.ஐ.கோர்ட்டில் நடந்தது. அவர்களில் 8 பேர் விசாரணை நடந்துவரும் நிலையில் இறந்து விட்டனர். குற்றம் நிரூபிக்கப்படாததால் மற்றவர்களை விடுதலை செய்து கடந்த 1996–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4–ந் தேதி நீதிபதி பேச்சிமுத்து தீர்ப்பளித்தார். தொடர்ந்து தலைமறைவான நயினார் முகமதுவை போலீசார் தேடி வந்தனர்.

இந்த நிலையில் திண்டுக்கல் ஆர்.எம்.காலனியில் உள்ள அசோக் நகரில் அவர் வசித்து வருவது போலீசாருக்கு தெரியவந்தது. அவரை கைது செய்து மதுரை சி.பி.ஐ.கோர்ட்டில் போலீசார் நேற்று ஆஜர்படுத்தினர். நயினார் முகமதுவை வருகிற 4–ந் தேதி வரை காவலில் வைக்க நீதிபதி கார்த்திகேயன் உத்தரவிட்டார். வழக்கு பதிவு செய்யப்பட்ட 1975–ம் ஆண்டு 40 வயதில் தலைமறைவான நயினார் முகமது, 31 ஆண்டுகள் கழிந்த நிலையில் 71–வது வயதில் கைது செய்யப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.


## சமாதானத்தை நோக்கி இந்து நாடு





நேபாள அரசுக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே அண்மையில் ஏற்பட்டுள்ள சமாதான ஒப்பந்தத்தை நேபாள மன்னர் கயனேந்திரா வரவேற்றுள்ளார். சுமார் பத்தாண்டு காலம் நீடித்த இந்த யுத்தம், 13,000 நேபாள மக்களைப் பலிகொண்டுள்ளது. அரசுக்கு எதிரான தீவிரவாதப் போராட்டம் இவ்வொப்பந்தத்தின் மூலம் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. போராளிகளும் இணைந்த இடைக்கால அரசொன்றை அமைப்பதற்கு இவ்வொப்பந்தம் வலிகோலுகின்றது.

மன்னர் கயனேந்திரா கடந்த பெப்ரவரி 2005இல் அதிகாரத்தை ஏற்றபோதும், மன்னராட்சிக்கு எதிராகத் தொடர்ந்த மக்கள் எழுச்சி காரணமாகத் தன் பதவியிலிருந்த ஆறுமாதங்களுக்கு முன்னர் ஒதுங்கிக்கொண்டார். தன் நேரடி ஆட்சிக்காலத்தின்போது, ஜனநாயகவாதிகளின் சாத்வீகப்போராட்டங்களை மூர்க்கமாகத் தனது 90,000 பேரைக் கொண்ட பெரும்படையினை ஏவி அடக்கியதாக ஒரு குற்றச்சாட்டு அவர்மேல் தற்போது உள்ளது.

மன்னரின் அதிகாரக் களைவின் பின்னரான கடந்த ஆறு மாதங்களாக, நேபாள அரசின் பல்கட்சி அரசுக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்குமிடையில் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருந்தது. இக்காலகட்டத்தில் மன்னரின் இராணுவ அதிகாரங்களும் களையப்பட்டுவிட்டன. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறவுள்ள ஆட்சிமன்றத் தேர்தல் உலகின் ஒரேயொரு இந்து நாடான நேபாளத்தின் தலைவிதியை நிர்ணயிக்க இருக்கின்றது. பெரும்பாலும் நேபாள் ஒரு மதசார்பற்ற நாடாக உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## திருப்புமுனையாக அமையும் இந்திய - சீன ஒப்பந்தம்



தென்னாசியாவில் துரிதமாக வளர்ந்து வரும் அரசுகளான இந்தியாவும், சீனாவும் கடந்த 21ம் திகதி நவம்பரில் 13 அம்சங்களைக் கொண்ட கேந்திர ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இவ்வொப்பந்தத்தின் ஒரு முக்கிய அம்சமாக இரு நாடுகளிடையேயான வர்த்தகம் அளவு இவ்வருடம் 20 பில்லியன் டொலர்களால் விரிவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து மறுநாள் இந்தியாவுக்கு விஜயம் செய்த சீன ஜனாதிபதி Hu Jindao தம்மிடையேயான ஒரு சகாப்தகால எல்லைப் பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர புதுடில்லியுடன் தமது நாடு ஒத்துழைக்க விரும்புவதாகத் தெரிவித்தார். சீனா இந்தியாவுடனான அரசியல் நம்பகத்தன்மையை மேம்படுத்தி, வர்த்தக தொடர்புகளை பலமாக்கி ஒரு கேந்திர நட்புறவை வளர்ப்பதுடன் 21ம் நூற்றாண்டு ஒரு ஆசிய நூற்றாண்டாக (Asian Century) வளர உதவுவதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த 10 வருடகாலத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள முதல் சீன ஜனாதிபதி இவரென்பது இங்கு அவதானிக்கத்தக்கது.


## லெபனான் கிறிஸ்தவ அமைச்சர் சுட்டுக்கொலை

டிசம்பர் 22ல் தனது பிரதேசமான கிழக்கு லெபனானிலுள்ள ஒரு கிராமத்துக்கு விஜயம் செய்தபோது லெபனானிய மரணைட் கிறிஸ்தவ அரசியல் வாதியும் 34 வயதான கைத்தொழில் அமைச்சருமான பியே ஜமாயல் (PIerre Gemayal) சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து அமெரிக்க சார்பும் சிரிய எதிர்பபும் கொண்ட லெபானானிய அரசுக்கும் சிரியசார்பு எதிர்த்தரப்பான ஹெஸ்பொல்லாவுக்கும் இடையே உறவுகள் நெருக்கடி நிலையடைந்துள்ளன.

58%மான ஷியா முஸ்லிம்கள் வாழும் இந்நாட்டில் 1932ம் ஆண்டு குடிசனக்கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்து லரையப்பட்ட அரசியல் சாசனப்படி மரணைற் கிறிஸ்தவர்களுக்கு ஆட்சியதிகாரத்தில் அதிக பங்கு வழங்கப்பட்டமை இப்பிரச்சனைக்கு ஒருகாரணியாகும். கடந்த இரண்டு வருடகாலத்தில் கொல்லப்பட்ட 5வது சிரிய எதிர்ப்பு அரசியல்வாதி இவராவார்.

அமைச்சர் ஜமாயலின் கொலைக்கு சிரியா பின்னணியில் இருப்பதாக முன்வைக்கப்பட்டு உள்ள குற்றச்சாட்டை சிரியா மறுத்துள்ளது. அதேவேளை அமெரிக்க ஜனாதிபதி புஷ் லெபனானிய பிரதமருடன் தொடர்பு கொண்டு ஈரானினதும், சிரியாவினதும் தலையீடுகளிலிருந்து லெபனானின் சுதந்திரத்தை பாதுகாக்க தாம் அந்நாட்டிற்கு உதவுவதாக உறுதியளித்தார்.

இதனைத் தொடரந்து லெபனானின் தலைநகரான பெய்ருட்டில் ஒரு அரசியல் ஊர்வலமாக இடம்பெற்ற ஜமாயலின் இறுதிச்சடங்கில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பதட்டநிலையிலிருந்த தலைநகரில் நூற்றுக்கணக்கான துருப்புக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்துடன் ஹெஸ்பொல்லாவினால் ஏற்கனவே திட்டமிடப் பட்டுள்ள அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் இந்நெருக்கடிநிலைக்கு மேலும் எண்ணெய் வார்ப்பதாக அமையும் என்ற எதிர் பார்க்கப்படுகின்றது.



படம் : கொல்லப்பட்ட இளம் அரசியல்வாதியின் PIerre Gemayal இறுதி ஊர்வலம்

உண்மை ! நடுநிலை ! மக்கள் நலன் !

பரதநாட்டியக் கலையை இலங்கையின் புகழ்பெற்ற ஸ்ரீமதி லீலா ராயணனிடமும் பின் கலாஷேத்திரா, அடையாறு லட்சுமணனிடமும் கற்றுத் தேறிய பெருமை கொண்டவர் ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜா. 1982 ம் ஆண்டு அனைத்து அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தனி நடனப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றிருக்கிறார். 'பரத இலக்கணம்' என்ற நாட்டியத்தின் நுணுக்கங்கள் பற்றிய நூலை ஜெயந்தி வெளியிட்டுள்ளார். தற்போது நெதர்லாந்து, லண்டன் ஆகிய நாடுகளில் நாட்டிய ஆசிரியையாகப் பணி புரிந்துவருகிறார் ஸ்ரீமதி.ஜெயந்தி யோகராஜா.

# ஜெயந்தி யோகராஜாவுடன் சந்திப்பு



*நவஜோதி: நீங்கள் நாட்டியக் கலாநர்த்தகியாக இருப்பதோடு பரத இலக்கணம் என்ற நூலையும் எழுதி வெளியட்டிருப்பது இரட்டிப்புச் சாதனை எனக் கருதுகிறேன். இப்படி ஒரு நூலை எழுதவேண்டும் என்று எப்படி உங்களுக்கு ஒரு ஆர்வம் ஏற்பட்டது?*

ஜெயந்தி: நான் புலம் பெயர்ந்து நெதர்லாந்து வந்த பின் ஜேர்மனியிலும் நெதர்லாந்திலும் நாட்டியத்தை பயில வேண்டும் என்ற தமிழ் மாணவர்களுக்காக 'சலங்கை நர்த்தனாலய' பள்ளியை ஆரம்பித்து நடாத்தி வந்தேன். இதில் பல நாட்டு மாணவர்களும் நாட்டியக்க கலையைப் பயின்றார்கள். அதாவது தமிழ் மாணவர்களுடன் மலையாளம், ஹிந்தி, டச்சு, டொச்சு, பெல்ஜியம், சுரைநாம் போன்ற பல நாட்டவர்கள், இனத்தவர்கள் வந்து பயின்றதால் அவர்களுக்கு அந்நூல் மேலும் உதவி செய்யும் என்ற நோக்கத்தில் நாட்டிய பாவங்களை வரை படங்களுடன் தெளிவுபடுத்தி எழுதியிருந்தேன். இதனை நான் டச்சு மொழியிலும் மொழிபெயர்த்து எழுதியிருந்தேன். இப்போ நாட்டிய விலாசம் என்ற நூலை எழுதிக்கொண்டிருக்கிறேன். அது மிக விரைவில் வெளிவரும்.

*நவஜோதி: நாட்டியக் கலையில் மிகுந்த அனுபவம் உள்ளவர் என்ற வகையில் நாட்டியக் கலையைப் பயிற்றுவிக்கும்போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றிக் கூறுவீர்களா?*

ஜெயந்தி: அசைவுள்ள ஆடலுடனும் இசைவுள்ள பாடலுடனும் பிறந்தவன்தான் மனிதன். இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் முத்தமிழ் என்ற ஒரு சொல்லில் அடக்கி வளர்த்த பெருமை தமிழுக்கே உண்டு. இந்த முத்தமிழுக்கு உயிர் ஊட்டுவது நாட்டியக் கலை. கவின் கலைகளில் நாட்டியக் கலையும் ஒன்று.

நாட்டியக் கலை ஒரு ஆற்றல் வாய்ந்த ஒரு கலையாகும். அதாவது உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொண்டு கண்களின் மூலமாக கைவழியாக உடலின் அசைவுகளினால் வெளிப்படுத்தும் ஒரு அற்புதமான கலைதான் இந்த நாட்டியக் கலை.

பேசும் மொழி இல்லாத ஆரம்ப காலத்தில் ஆதி மனிதனின் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக நடனம் இருந்தது. தெளிவில்லாத பொருளற்ற ஒலிகளுடனே அவனுடைய செயல்கள், அவனது எண்ணத்தையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தின. இவ்வாறாகத்தான் நடனம் பிறப்பெடுத்தது. அதன்பின் ஒலிகள் இசையோடும் அசைவுகள் தாளக்கட்டோடு கூடிய ஒழுங்கோடும் பொருந்திய அளவில் அவ்வியக்கம் உணர்ச்சியும் இன்பமும் தரும் நாட்டியமாக அமைந்தது.

*நவஜோதி: நாட்டிய அரங்கேற்றம் பற்றிய உங்களது கருத்துக்கள் என்ன?*

ஜெயந்தி: ஒரு நல்ல குருவிடம் ஐயம் திரிபறக் கற்ற மாணவர்கள் தாம் கற்றதை பெரியவர்கள், சான்றோர்கள், புலவர்கள் முன்னிலையில் அதை செய்து காட்டி அவர்களின் ஒப்புதலை ஏற்கும் எம் பாரம்பரிய கலாச்சாரத்தின் நிகழ்வுதான் அரங்கேற்றம் என்பது.

ஆடுபவர்கள் நாட்டிய கிரமத்திற்கு ஏற்புடையதாக 'கைவழி நயனம் செல்ல, கண் வழி மனம் செல்ல, மனம் வழி உணர்ச்சி செல்ல, அதனின்று சுவை பிறக்க' ஆடவேண்டும். இக்கலை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கும் தகுதியுடையவர்களைத்தான் சபாநாயகர் என்கின்றோம். அடுத்து நல்ல ரசிகர்கள் இருக்க வேண்டும். ஒரு நிகழ்ச்சியின் வெற்றிக்கு கலைஞர்களுக்கு நிகராக கலை உணர்வு கொண்ட ரசிகர்களும் தேவை.

நடனம் ஆடுபவர்கள் சலங்கை பூஜை செய்து கட்டிக் கொள்ள வேண்டும் என்பது மரபு. பின் தோடயமங்களத்தில் இறைவனை வணங்கி மேளப் பிராப்தியில் களை கட்டிவிடும் நடன நிகழ்ச்சி அலாரிப்பில் மலர்ந்து ஜதீஸ்வரத்தில் சூடுபிடித்து, சப்தத்தில் அபிநயத்தை அறிமுகப்படுத்தி, வர்ணத்தில் எல்லா அம்சங்களிலும் விரிவடைந்து பின் பதம் கீர்த்தனம் யாவளி அஷ்ட பதியில் ரஸானுபவத்தில் சஞ்சரித்து தில்லானாவில் விறுவிறுப்பாக சிகரமடைந்து விருத்தத்தில் மீண்டும் தெய்வத்தோடு ஒன்றிவிடும் ஓர் அழகிய சீரான முறைதான் இந்த அரங்கேற்றம் என்பது.

*நவஜோதி: நீங்கள் இதுவரை எத்தனை அரங்கேற்றம் செய்துள்ளீர்கள்?*

ஜெயந்தி: நான் புலம் பெயர்ந்து வந்தபின் ஜேர்மனியில் நான்கு மாணவர்களுக்கும் நெதர்லாந்தில் மூன்று மாணவர்களுக்கும்தான் அரங்கேற்றம் செய்துள்ளேன். ஓரளவு முழுமையாக கற்றறிந்த பின் தான் அரங்கேற்றம் செய்ய வேண்டும். அத்துடன் நடனத்துடன் நின்றுவிடாமல் அதன் விதிமுறைகளையும் நன்கு கற்றிந்தபின் தான் இந்நிகழ்வை நடத்தவேண்டும் என்பது என் கொள்கை. அதனால்தான் இங்கு வந்து 15 வருடங்களிலும் 7 அரங்கேற்றங்கள் மட்டுமே செய்துள்ளேன். ஆனால் 100க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை என் மாணவர்கள் மூலம் மேடை ஏற்றியுள்ளேன்.

நவஜோதி: இலக்கியங்கள் நவீன மாற்றமடைந்தது போன்று இந்த நாட்டியக் கலையிலும் மாற்றங்கள் செய்து கொள்ளலாமா? இது பற்றிய உங்களுடைய கருத்து என்ன?

ஜெயந்தி: இலக்கியங்கள் காலத்திற்கேற்ப மாறுபடலாம். ஆனால் அதன் அடிவேர் ஒன்றுதான். அதுமாதிரித்தான் நாட்டியமும். காலத்திற்கு காலம் சில மாற்றங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அதன் அடித்தளம் ஒன்றுதான். பரதநாட்டிய அரங்கேற்றம் என்று வரும்போது உருப்படிகள் மாறுபடக்கூடாது என்பது எனது கருத்து. மற்றும்படி வேறு நிகழ்ச்சிகள் என்று வரும்போது நாம் வேறு விதமான நடனங்களையும் உட்புகுத்தி நவீனமாகக் கையாளலாம்.

*நவஜோதி: சமூக உந்துதலுக்கு ஏற்ப எப்படி நாட்டியத்தை கையாளலாம்?*

ஜெயந்தி : வாழ்க்கையில் நடக்கும் பல சுவையான நிகழ்ச்சிகள், பிரச்சனைகள் என்பவற்றை எடுத்து அதற்கு நாட்டிய வடிவம் கொடுத்து கையாளலாம். எனது நெதர்லாந்து, ஜேர்மன் மாணவர்களைக் கொண்டு சாதாரணமாக குடும்பங்களில் நடைபெறும் மாமியார் மருமகள் பிரச்சனையை இப்படி நாட்டியங்களினுடாக வெளிப்படுத்தி அரங்கேற்றியுள்ளேன். இது எல்லோரையும் கவருகின்ற எல்லோருக்குமே விளங்கக் கூடியதாக இருக்கிறது. காரணம் இது சமூகத்தில் யதார்த்தமாக சந்திக்கும் நிகழ்ச்சியாக இருப்பதால்.

*நவஜோதி: திருமணத்திற்குப் பின் பெண்கள் இந்த நாட்டியக் கலையை* வளர்க்கிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

ஜெயந்தி: பல பெண்கள் திருமணத்திற்கு முன் ரொம்ப அருமையாக நாட்டியமாடி எத்தனையோ விருதுகளையும் வாங்கியிருப்பார்கள். ஆனால் திருமணத்திற்குபின் அவர்கள் அவர்களாகவே இருப்பதில்லை. காரணம் அவர்களுடைய கணவருக்கோ அல்லது கணவரின் உறவினர்களுக்கோ பிடிக்கவில்லை என்ற காரணத்தினால் இதற்கு எதிர் மாறாகவும் இருக்கிறார்கள். சில மாணவர்கள் புரிந்துணர்வு கொண்ட கணவர் உறவினர்கள் இருப்பதால் அப்பெண்களிடம் மீண்டும் இக்கலை வளர்க்கப்படுவதைப் பார்த்திருக்கிறேன். 'கணவர் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்றும் சொல்லாம்.

நவஜோதி: தொடர்ந்து இக்கலையை வளர்க்க என்ன முயற்சிகள் செய்கிறீர்கள்?

ஜெயந்தி: முயற்சி என்று சொல்வதைவிட எனது ஆவல் என்று சொல்லலாம். வருங்காலத்தில் எனது 'சலங்கை நர்த்தனாலயம்' நாட்டியப்பள்ளி விரிவடைந்து இன்னும் பல திறமையான மாணவர்களை உருவாக்க வேண்டும். அத்துடன் தெய்வீகமான ஒரு சூழலில் அது கவின் கலைக்கூடமாக மாறவேண்டும் என்பதே என் ஆசை.

(மற்றுமொருவருடன் அடுத்த இதழில் சந்திப்போம்.)

HARTEX
ESTABLISHED 1969
THE GREAT OUT DOORS
COMBAT · PULLOVERS · THERMAL UNDERWEAR · MAP CASES · RAINWEAR · COMPRESSORS BAGS · BODY WARMERS · SHORTS · CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS · HIKING BOOTS · CUTLERY SETS · HAMMOCKS · PLATES · WEBBING · GLOVES · HEADWEAR · HIKING BOOTS
Competitive prices
55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244
321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333



J & J WINES LTD
WHOLESALERS OF WINES, BEERS, SPIRITS, TOBACCO GROCERIES, TOILETRIES AND MANY MORE!
GREAT VALUE FOR MONEY! EXCELLENT CUSTOMER SERVICE! EXCEPTIONAL QUALITY!
OPENING TIMES:
MON-FRI: 7AM-8PM SAT-7AM-5PM SUN-8AM-4PM
FIND US AT-
J & J WINES LTD, 10 BOEING WAY, INTERNATIONAL TRADING ESTATE, BRENT ROAD, SOUTHALL, MIDDLESEX, UB2 5LB TEL: 020 8867 9595 FAX: 020 8867 9795



CARRARA
the choice for natural stone
- Manufacturers of kitchen worktops and bathroom finishes
- Largest selection of stone slabs & tiles
- Fitting 7 days from templating
- Trade & general public welcome
45-47 Standard Road
London NW10 6HF
T 020 8838 4604
F 020 8838 4603
www.carraramarble.co.uk

London Airport Taxi Service
0870 042 8886 BAtransfer.COM
Transfers To and From All London Airports to Anywhere in UK
£2.00 Off PER JOURNEY WHEN YOU HAND OVER THIS VOUCHER TO DRIVER
விமானநிலையம் செல்லவும் அழைத்து வரவும் அனுபவம் பெற்றவர்கள்.

Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 1-13, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

Specialists in:
All kinds of fittings & suppliers of quality carpets, wood & vinyl flooring
J.S. Carpets
TEL: 020 8578 5959
508-510 Lady Margaret Road, Southall, Middlesex UB1 2NP jscarpets@msn.com


To Advertise
07957681944

Morjarias Toys & Gifts
Xmas Wrap
Xmas Cards
Stationery
Soft Toys
Murtis
Tools – Hardware
Rizla – Duracell
Toiletries
Photo Frames
Party Goods
Household Items
Candles - Giftware
Panasonic Batteries
Pocket Money Toys
Helium Balloons
£ - Pound Lines - £
Trade Only
Morjarias House
North Circular Road
London NW10 7UD
☎ 0870 333 6898
www.toysgifts.biz

| Opening Times | | | |
|---|---|---|---|
| Mon to Fri | 10am | - | 6pm |
| Late Night Thur | 10am | - | 8pm |
| Saturday | 9am | - | Midday |
| Sunday | 9am | - | 3pm |



NW. Constructions Ltd
- Extension
- Conservatory
- Loft Conversion
- Plastering
- Kitchen
- Bathroom
- Heating
- Skimming
- All General Building Work Undertaken
- Free Estimate
Office: 020 8561 9284
Fax: 020 8573 1731
nwconltd@yahoo.co.uk
OVER 15 YEARS EXPERIENCE
020 8952 5677



furniture essentials
Quick & Simple Living Solutions
Sofas, Sofabeds & Dining Furniture
EXTRA 10% off our Current Sale Prices with this Advert.
13 Brentside Works, North Cicular Rd
Wembley NW10 7SX
Call: 020 8965 8588

Secure a brighter future with a Degree
Bachelor and Masters Degree Programmes
Commencing April 2007
at
London School of Management
43-47 New Broadway, Ealing, London, W5 5AH
Call 0208 567 4355 or email:admin@lsm.ac.uk
for more details or visit our website
www.lsm.ac.uk

Saratha JEWELLERS
MODERN DESIGNS - EXCLUSIVE COLLECTION
ANTIQUE STYLE - CRAFTED JEWELLERY
22ct gold specialist
saratha - A name well known for creativity & innovation
105 Ilford Lane, Ilford, Essex 1G1 2RJ
Tel: 020 8514 3072



IDEAL GLAZING
WITH OVER 20 YEARS EXPERIENCE
Manufacturers & Installers of uPVC and Aluminium
FOR FREE ESTIMATE CALL
020 8574 8342
Fax: 020 8843 1903
IDEAL GLAZING (EURO) LTD
29 The Green, Southall
Middlesex, UB2 4AN



A1 Auto Centres
TYRES ALLOYS EXHAUSTS SHOCKS BATTERIES BRAKES SERVICING
State of the art 4 wheel electronic alignment
Aloy Wheels
Brake Pads
Come in for a winter check
Best Deal in Town
Powerflow Stainess Steel exhaust system for any car
Next to Morrisons 0208 204 6868
Bowman Trading Estate, West Morland Rd, NW9

J K SHAH
J.K. Shah (B.A.Hons) F.C.C.A
Chartered Certified Accountant
Accountants, Tax and Business Advisers
Complete Accounting Services
ACCOUNTANCY
Accounts prepared for Sole Traders, Partnerships & Limited Companies
TAXATION
All kinds of taxation matters
VAT & BOOK-KEEPING
Competitive Book-keeping and VAT Service, Using Computerised System
PAYROLL
Comprehensive Computerised Payroll Services
ACCA
572-574 Romford Road, Manor Park, London E12 5AF
Tel: 020 8553 2436 Fax: 020 8514 6939
E-mail: info@jkshah.com
Internet: www.jkshah.com

MANUFACTURING LTD
T:020 8571 0043/020 8574 2571 F:020 8843 0746
220 Uxbridge Road, Southhall, Middx UB1 3DZ
mbs
-Durable-Unbeatable Price-Free Design & Delivery-5 Years Guarantee-All Units Made from 18mm
Heating & Plumbing supplies, Bathroom Showers & Sanitary Ware, Fittied Kitchens, Bedroom Furniture, Marble & Granite Floors, Worktops, Tiles & Other Products
e-mail: mbsmanufacturing@btconnext.com
mbsgroupcompanies.com